

# வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று 2025/2026

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை

2026 நவம்பர் 12



# வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று

# 2025/2026

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 20 (2)(ஏ)ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை

2026 நவம்பர் 12

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்டு, இல. 118, கலாநிதி டாக்டர் டானிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, இலங்கை, கொழும்பு 01, செயலகத்தில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

## வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று – 2025/2026

இந்த அறிக்கையில் தற்போதுள்ள வரிச் செலவுகளின் மொத்த செலவு மற்றும் புதிய வரிச் செலவினங்களை வெளிப்படுத்துதல் உள்ளிட்ட 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 20(2)(ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வரிச் செலவினங்கள் பற்றிய கூற்றினை உள்ளடக்கியுள்ளது

## பொருளடக்கம்


நிறைவேற்றுச் சுருக்கம்

பகுதி I – வரிச் செலவுகள் மற்றும் ஒப்பீட்டு அளவுகோல் வரி முறைமை

அத்தியாயம் 1 - அறிமுகம்

1.1 மேன்நோக்கு 3

1.2 நோக்கம் மற்றும் வரையறை 3

1.3 வரிச் செலவினத்தின் வகைப்பாடு மற்றும் வரைவிலக்கணம் 3

1.4 ஒப்பீட்டு அளவுகோல் வழிமுறைமை 6

1.5 கட்டமைப்பு நிவாரணங்கள் 10

1.6 வரிச் செலவின மதிப்பீடு 12

1.7 நவம்பர் 2025 இல் வெளியிப்பட்ட முந்திய வெளியீட்டுக்குப் பிறகு வரிச் செலவின அறிக்கையில் செய்யப்பட்ட மாற்றங்கள் 12

1.8 வரையறைகள் மற்றும் தரவுப் பரிசீலனைகள் 13

1.9 முன்னோக்கிச் செல்லும் வழி மற்றும் சீர்திருத்தம் 14

பகுதி II – வரிச் செலவின மதிப்பீடுகள்

அத்தியாயம் 2 - வரி வகையின் அடிப்படையில் வரிச் செலவினம் பற்றிய நோக்கும் பகுப்பாய்வும்

2.1 நிறுவன வருமான வரி (CIT) 18

2.2 தனிநபர் வருமான வரி (PIT) 19

2.3 பெறுமதி சேர் வரி (VAT) 19

2.4 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) 22

2.5 உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (XID) 24

2.6 சுங்க இறக்குமதி தீர்வைகள் (CID) 24

2.7 மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV) 26

2.8 முடிவுரை 26

பகுதி III – வரிச் செலவின விபரப்பட்டியல்

அத்தியாயம் 3 – வரிச் செலவின விபரப்பட்டியல்

3.1 நிறுவன வருமான வரி செலவின விபரப்பட்டியல் 29

3.2 தனிநபர் வருமான வரி செலவின விபரப்பட்டியல் 31

3.3 பெறுமதிசேர் வரி செலவின விபரப்பட்டியல் 32

3.4 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டு செலவின விபரப்பட்டியல் 42

3.5 உற்பத்தித் தீர்வை செலவின விபரப்பட்டியல் சிறப்பு ஏற்பாடுகள் 59

3.6 சுங்கத் தீர்வை செலவின விபரப்பட்டியல் 61

வரைபுகள்

வரைபு 2.1: குறிப்பட்ட காலப்பகுதிற்கான வரி செலவினத்தின் சுருக்கம் 18

வரைபு 2.2: தனிநபர் வருமான வரிச் செலவு 2024 - 2025 19

## அட்டவணைகள்

### பகுதி I – வரிச் செலவினங்களும் ஒப்பீட்டு அளவுகோல் வரி முறைமையும்


அட்டவணை 1.1: வரி வகையின் அடிப்படையில் பொதுவான வரிச் செலவினங்களின் எடுத்துக்காட்டுகள் 4

அட்டவணை 1.2: வரிச் செலவின வகைப்பாடு 4

அட்டவணை 1.3: வரிச் செலவினத்திற்கான பிரதான கொள்கை அறிவார்ந்த அடிப்படை 5

அட்டவணை 1.4: பிரதான ஒப்பீட்டு அளவுகோல் வரைகூறு ஒருபார்வை 6

அட்டவணை 1.5: தனிநபர் வருமானவரி: ஒப்பீட்டு அளவுகோல் வரி விகித அமைப்பு 8

அட்டவணை 1.6: இலங்கையின் வரிமுறையில் கட்டமைப்பு நிவாரணங்கள் 11

அட்டவணை 1.7: இலங்கை வரிச் செலவிடல் அறிக்கையிடல் சர்வதேச சிறந்த நடைமுறைகளின் ஒப்பீட்டு ஆய்வு 14


### பகுதி II – வரிச் செலவின மதிப்பீடுகள்


அட்டவணை 2.1: வரி வகையின் அடிப்படையில் வரிச் செலவினம் 17

அட்டவணை 2.2: நிறுவன வருமான வரிச் செலவினம் 18

அட்டவணை 2.3: தனிநபர் வருமான வரிச் செலவினம் 19

அட்டவணை 2.4: பெறுமதி சேர்வரிச் செலவினத்திற்கான சுருக்கம் 20

அட்டவணை 2.5: முதலீட்டுச் சபை நிறுவனங்களுக்கான துறை ரீதியான பெறுமதிசேர் வரிச் செலவினம் 20

அட்டவணை 2.6: செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் துறைமுக நகரத் திட்டங்களைத் தவிர்த்து, முதலீட்டுச் சபை அல்லாத நிறுவனங்களுக்கான துறை வாரியான பெறுமதிசேர் வரி செலவுகள் 21

அட்டவணை 2.7: செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டத்திற்கான துறை ரீதியான பெறுமதிசேர் வரிச்செலவினம் 21

அட்டவணை 2.8: சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சுருக்கம் 22

அட்டவணை 2.9: முதலீட்டு சபை நிறுவனங்களுக்கான சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு செலவு மதிப்பீடுகள் துறை ரீதியாக 22

அட்டவணை 2.10: செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டங்களைத் தவிர்த்து, முதலீட்டுச்சபை அல்லாத நிறுவனங்களுக்கான துறை ரீதியான சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் செலவினம் 23

அட்டவணை 2.11: செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு செலவு மதிப்பீடுகள் துறை ரீதியாக 23

அட்டவணை 2.12: கொழும்பு துறைமுக நகர துறைக்காக அண்ணளவாக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டு செவினம் 23

அட்டவணை 2.13: உற்பத்தித் தீர்வை விசேட ஏற்பாடுகளின் வரிச் செலவீனம் 24

அட்டவணை 2.14: சுங்க இறக்குமதி தீர்வை செலவினம் 25

அட்டவணை 2.15: மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி விலக்களிப்பின் சுருக்கம் 26

## நிறைவேற்றுச் சுருக்கம்

2025/2026 ஆம் ஆண்டிற்கான வரிச் செலவினங்கள் பற்றிய கூற்றானது, (TES) ஒப்பீட்டு அளவுகோல் வழிமுறைமையுடன் தொடர்பான முன்னுரிமைச் சலுகைகளை வழங்கும் ஏற்பாடுகள் மூலம் இழக்கப்படும் வருமான மதிப்பீட்டை முன்வைக்கிறது. இது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 20(2) (ஏ) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டதுடன் நிதி வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஆதார அடிப்படையிலான கொள்கை உருவாக்கம் ஆகியவற்றிற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

வரிச் செலவினங்கள் அரச மூலவள ஒதுக்கீட்டின் ஒரு முக்கியப் பகுதியாகும். அரசாங்கங்கள் பொருளாதார, சமூக மற்றும் அபிவிருத்தி இலக்குகளை நேரடிச் செலவினங்கள் மூலமாக மட்டுமல்லாமல், வரி விலக்குகள், கழிவுகள், சலுகைகள், முன்னுரிமை விகிதங்கள், வரி விடுமுறைகள், வரவுகள், தள்ளுபடிகள் மற்றும் வரி ஒத்திவைப்புகள் போன்றவற்றை வழங்குவதன் மூலமான வரி முறைமை வழியாகவும் அடையலாம். இத்தகைய நடவடிக்கைகள் நியாயமான கொள்கை நோக்கங்களுக்கு உதவினாலும், அவை அரசாங்க வருமானத்தைக் குறைக்கின்றன அல்லது ஒத்திவைக்கின்றன, எனவே அவை பொது ஆதரவின் அவ்வளவாக வெளிப்படாத ஒரு வடிவமாக அமைகின்றன.

2025/2026 ஆம் ஆண்டிற்கான வரிச் செலவினங்கள் பற்றிய கூற்றானது (TES), 2024/2025 ஆம் ஆண்டிற்கான வரிச் செலவினங்கள் பற்றிய கூற்றில் (TES) ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இது வரிச் செலவினங்களைக் கண்டறிதல், வகைப்படுத்துதல் மற்றும் அளவிடுதல் ஆகிய செயல்முறைகளை மேலும் வலுப்படுத்துகிறது.

இக்கூற்றானது பின்வரும் வரிகளை உள்ளடக்கியுள்ளது. நிறுவன வருமான வரி(CIT), தனிநபர் வருமான வரி(PIT), பெறுமதி சேர் வரி (VAT) சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (XID), சுங்க இறக்குமதி தீர்வை (CID), மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV).

### வரி வகைகளின் அடிப்படையில் வரிச் செலவினம்

| வரிச் செலவின வகை | வரிச் செலவினம் | | | |
|---|---|---|---|---|
| | 2023/24 | | 2024/25 | |
| நிறுவன வருமான வரி | | 119,290 | | 186,069 |
| தனி நபர் வருமான வரி | | 10,461 | | 36,278 |
| | வரிச் செலவினம் | | | |
| மறைமுக வரி | 2023 | 2024 | 2025 | 2026 முதல் பாதி |
| பெறுமதி சேர் வரி | - | 333,295 | 419,251 | 242,954 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | - | - | 216,283 | 135,270 |
| உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) | - | 9,967 | 16,254 | 9,023 |
| சுங்க இறக்குமதி தீர்வை | - | 138,426 | 144,473 | 74,247 |
| மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி | 480 | 1,800 | - | - |

*குறிப்பு: இம்மதிப்பீடுகள் வெவ்வேறு வரிக் காலப்பகுதிகளுக்கும் மதிப்பீட்டு அடிப்படைகளுக்கும் உரியவையாக இருக்கலாம். எனவே, அவற்றைப் பொருள்கொள்ளும்போது தொடர்புடைய அறிக்கையிடல் காலப்பகுதியையும் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறையியலையும் கருத்திற்கொள்ள வேண்டும்.*

அட்டவணை இந்த மதிப்பீடுகள் வெவ்வேறு வரி காலப்பகுதிகள் மற்றும் மதிப்பீட்டு அடிப்படைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம். எனவே, இவற்றை அந்தந்த காலப்பகுதி மற்றும் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளைக் கருத்தில் கொண்டே பொருட்கோடல் கொள்ளப்பட வேண்டும்.

இந்த அறிக்கையானது "வருமான இழப்பு" அணுகு முறையைப் பின்பற்றுகிறது. இதன்பிரகாரம், இம்மதிப்பீட்டில் பயன்படுத்தப்படுகின்ற அனுமானங் களுக்கு உட்பட்டு, மதிப்பிடப்பட்ட நிதிச் செலவு என்பது, நடை முறையில் உள்ள வரி அமைப்பின் கீழ் செலுத்த வேண்டிய வரிக்கும், ஒரு ஒப்பீட்டு அளவுகோலின் கீழ் செலுத்த வேண்டிய வரிக்கும் இடையிலான வித்தியாசமாகும் அதன்படி, அதற்கேற்ப, ஒரு வரிச் செலவின மதிப்பீடானது தொடர்புடைய விதிமுறை நீக்கப்பட்டால் அவசியமாக ஈட்டப்படக் கூடிய வருமானத்தின் மதிப்பீடாகப் பொருள்கோடப்படல் கூடாது. வரி செலுத்துவோரின் நடத்தை, முதலீடு, நுகர்வு, விதிமுறைகளுக்குக் கட்டுப்படுதல் மற்றும் ஏனைய பொருளாதாரச் சூழல்களில் ஏற்படும் மாற்றங்கள், கிடைக்கக்கூடிய உண்மையான வருமானத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

இந்த அறிக்கை, வரிச் செலவினங்களுக்கும் கட்டமைப்புச் சலுகைகளுக்கும் இடையே வெளிப்படையாக வேறுபடுத்திக் காட்டுகிறது. ஒரு கோட்பாட்டு ரீதியான அல்லது எளிமைப்படுத்தப்பட்ட வரி அடிப்படையுடன் தொடர்பான வரியைக் குறைக்கும் ஒவ்வொரு விதியும் வரிச் செலவினமாகக் கருதப்படுவதில்லை. சாதாரணக் கழிவுகள், முற்போக்கான விகிதக் கட்டமைப்புகள், குறைந்தபட்ச வருமான எல்லை, இரட்டை வரிவிதிப்பு அல்லது அடுக்கு வரிவிதிப்பைத் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் சில சர்வதேசக் கடமைகள் போன்ற, ஒரு வரியின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டிற்கு இன்றியமையாத விதிகள், பொருத்தமான இடங்களில் கட்டமைப்பு அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

ஒவ்வொரு வரிச் செலவினத்தின் வடிவத்தையும் அடையாளம் காண்பதற்கு மேலதிகமாக 2025/2026 கட்டமைப்பு அறிக்கையானது, முதலீட்டு ஊக்குவிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், ஏற்றுமதி அபிவிருத்தி, துறைசார் அல்லது பிராந்திய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்குதன்மை, புத்தாக்கம், சூழலியல் நோக்கங்கள் மற்றும் சர்வதேசக் கடமைகள் போன்ற அதன் கொள்கை நியாயங்களையும் அடையாளம் காட்டுகிறது. இது, ஒவ்வொரு வரிச் செலவினத்தின் நிதிச் செலவையும் அதன் உத்தேசிக்கப்பட்ட கொள்கை நோக்கத்துடன் கருத்தில் கொள்ள ஏதுவாகின்றது.

இந்த அறிக்கை, தனிப்பட்ட வரி நடவடிக்கைகளின் விரும்பத்தக்க தன்மையை சுயமாக மதிப்பிடுவதற்கு அப்பால் ,பிரதானமாக ஒரு வெளிப்படைத்தன்மை மற்றும் பகுப்பாய்வுக் கருவியாகச் செயல்படுகிறது. நிதிச் செலவு ஒரு முக்கியமான கருத்தாக இருந்தாலும், ஒரு விரிவான மதிப்பீடானது கொள்கையின் செயல்திறன், பயனாளிகள், விநியோகத் தாக்கங்கள், பொருளாதார விளைவுகள், நிர்வாக மற்றும் இணக்கச் செலவுகள், நடத்தை சார்ந்த பதில்கள் மற்றும் மாற்று கொள்கைக் கருவிகளின் கிடைக்கும் தன்மை ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

# பகுதி I

## வரிச் செலவுகள் மற்றும் ஒப்பீட்டு அளவுகோல் வரி முறைமை

# அத்தியாயம் 1 - அறிமுகம்

## 1.1 மேன்நோக்கு

வரிச் செலவினங்கள் அறிக்கையிடலானது வரி அமைப்பில் பொதிந்துள்ள முன்னுரிமை ஏற்பாடுகள் மூலம் இழக்கப்பட்ட வருமானத்தை வெளிப்படுத்துவதன் மூலம், வரிச் செலவின அறிக்கையிடல் நிதி வெளிப் படைத்தன்மையை மேம்படுத்துகிறது. இத்தகைய ஏற்பாடுகள் சட்டபூர்வமான பொருளாதார மற்றும் சமூக நோக்கங்களை அடையக்கூடும். ஆனால் நேரடிச் செலவினங்களைப் போலல்லாமல், அவை பொதுவாக வரவுசெலவுத் திட்டத்தில் செலவின அம்சங்களாக அல்லாமல், வரி வருமானத்தில் ஏற்படும் குறைப்புக ளாகவே பிரதிபலிக்கின்றன.

2025/2026 ஆம் ஆண்டுக்கான வரிச் செலவின அறிக்கை, இலங்கையின் முக்கிய வரி விதிப்புக் கருவிகளின் கீழ் எழும் பிரதான வரிச் செலவினங் களின் ஒருங்கிணைந்த மதிப்பீட்டை வழங்குகிறது. இது, வரி முறைமை மூலம் வழங்கப்படும் அரசாங்க ஆதரவின் தன்மை, நிதிச் செலவு, கொள்கைக்கான காரணம் மற்றும் பயனாளிகள் தொடர்பான தகவல் களை வழங்குவதன் மூலம் வரவுசெலவுத் திட்டத் திற்குத் துணைபுரிகிறது.

2025/2026 ஆம் ஆண்டுக்கான அறிக்கை, 2024/2025 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் நிறுவப்பட்ட வழிமுறையை அடிப்படையாகக் கொண்டு, உருவாக்கப் பட்டுள்ளதுடன், பின்வருவனவற்றின் மூலம் அதை மேலும் மேம்படுத்துகிறது.

- ஒவ்வொரு பிரதான வரிக்கும் தெளிவாக வரை யறுக்கப்பட்ட அளவுகோலைப் பிரயோகித்தல்
- கொள்கை சார்ந்த வரிச் செலவினங்களிலிருந்து கட்டமைப்பு அம்சங்களை வேறுபடுத்துதல்
- வரிச் செலவினங்களை அவற்றின் வடிவம் மற்றும் கொள்கை காரணத்தின் அடிப்படையில் வகைப் படுத்துதல்
- மதிப்பீடு மற்றும் அறிக்கையிடலில் நிலைத் தன்மையை மேம்படுத்துதல்
- தரவு எல்லைகள், மற்றும் வழிமுறை அடிப்படை யிலான அனுமானங்களை அடையாளம் காணுதல் மற்றும்
- எதிர்கால மதிப்பீட்டிற்கான அடிப்படையாக வரிச் செலவின பட்டியலை வலுப்படுத்துதல்.

இக்கூற்றானது பின்வரும் வரிகளை உள்ளடக்கி யுள்ளது. நிறுவன வருமான வரி (CIT), தனிநபர் வருமான வரி(PIT), பெறுமதி சேர் வரி (VAT) சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) உற்பத்தித் தீர்வை விசேட ஏற்பாடுகள் (XID) சுங்க இறக்குமதி தீர்வை(CID), மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி(LTMV) என்பனவாகும். ஒரு ஏற்பாடு வரிச் செலவாக இனங்காணப்பட்டு, அதை நம்பகமான முறையில் அளவிட முடியாத பட்சத்தில், ஆதாரமற்ற மதிப்பீட்டை முன்வைப்பதற்குப் பதிலாக, அது தனித்தனியாக வெளிப்படுத்தப்படுகின்றது.

எனவே, இதன் நோக்கம் வெறும் திரட்டிய வருமான இழப்புத் தொகையை மட்டும் கணக்கிடுவது அன்றி மாறாக, வரிக்கொள்கை தெரிவுகளின் நிதிசார் தாக்கங்களைப் புரிந்துகொள்வதற்கான தெளிவான, சீரான மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றிற்கான பயனுள்ள ஒரு கட்டமைப்பை உருவாக்குவதே ஆகும்.

## 1.2 நோக்கம் மற்றும் வரையறை

இந்த வருடாந்த வரிச் செலலவினங்கள் பற்றிய கூற்று 2024 ஆம் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி சார் முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ளது.

வரிச் செலலவினங்கள் பற்றிய கூற்றின் நோக்கங்கள்

1. வரி முறைமை மூலம் பொது வளங்களின் பயன்பாடு தொடர்பான வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்
2. வரிச் செலவினங்களைக் கண்டறிதல் மற்றும் பிரயோகிக்கத்தக்க இடங்களில் அவற்றின் அளவைக் குறிப்பிடுதல்
3. முன்னுரிமை விதிகளை மதிப்பிடுவதற்கு ஒரு நிலையான ஒப்பீட்டு அளவுகோலை நிறுவுதல்
4. குறிப்பிடத்தக்க வரிச் செலவினங்களின் சட்ட அடிப்படை, வடிவம் மற்றும் கொள்கைக்கான காரணத்தை வெளிப்படுத்துதல்
5. ஆண்டு வரவுசெலவுத் திட்டம் மற்றும் நடுத்தர கால நிதிக் கட்டமைப்பிற்குள் வரிக் கொள்கையின் ஆய்வுக்கு ஆதரவளித்தல் மற்றும்
6. வரிச் செலவினங்களின் காலமுறை மதிப்பீடு, தொடர்ச்சி, மாற்றம் அல்லது காலாவதிக்கான ஆதார அடிப்படையை வழங்குதல்.

இதன் எல்லை என்பது அதன் முக்கியத்துவம், கொள்கை ரீதியான பொருத்தப்பாடு, தரவுகளின் இருப்பு மற்றும் நம்பகமான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறு ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. இதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டிற்காக அளவிடப்பட்ட மதிப்பீட்டின் இன்மை என்பது, அங்கு வரிச் செலவினம் ஏதுமில்லை என்று அர்த்தமாகாது.

## 1.3 வரிச் செலவினத்தின் வகைப்பாடு மற்றும் வரைவிலக்கணம்

வரிச் செலவினம் என்பது, தொடர்புடைய ஒப்பீட்டு அளவுகோல் வரி முறைமையின் கீழ் பொருந்தக்கூடிய அணுகுமுறை தொடர்பாக, ஒரு குறிப்பிட்ட வரி செலுத்துபவர், செயல்பாடு, பரிவர்த்தனை, துறை, வரு-மான வடிவம், பொருள் அல்லது சேவைக்கு முன்னுரிமை அளிக்கும் வரி அமைப்பின் ஒரு ஏற்பாடாகும். இதன் விளைவாக வருமானம் இழக்கப்படுகிறது அல்லது ஒத்திவைக்கப்படுகிறது.

எனவே, இந்தக் கருத்து இயல்பாகவே ஒப்பீட்டு அளவுகோலைச் சார்ந்தது. ஒரு ஏற்பாடு செலுத்த வேண்டிய வரியைக் குறைப்பதால் மட்டுமே அது வரிச் செலவினமாகாது அது பொருந்தக்கூடிய ஒப்பீட்டு அளவுகோலின் கீழ் நிறுவப்பட்ட நிலையான அணுகு முறையிலிருந்து ஒரு விலகலைக் குறிக்க வேண்டும்.

வரிச் செலவினங்கள் பல்வேறு வடிவங்களில் இருக்கலாம்.

**அட்டவணை 1.1: வரி வகையின் அடிப்படையில் பொதுவான வரிச் செலவினங்களின் எடுத்துக்காட்டுகள்**

| வரி | உதாரணம் |
|---|---|
| தனிநபர் வருமான வரி (PIT) | வருமான விலக்குகள்: கழிவுகள் மற்றும் முற்பணங்கள், தகுதிவாய்ந்த நிவாரணங்கள் குறிப்பிட்ட வருமானத்திற்கான முன்னுரிமைச் சலுகைகள், இலக்குடைய சலுகைகள் |
| நிறுவன வருமான வரி (CIT) | வரி விடுமுறைகள் முன்னுரிமை விகிதங்கள் முதலீட்டு முற்பணங்கள், மேம்படுத்தப்பட்ட அல்லது விரைவுபடுத்தப்பட்ட மூலதன முற்பணங்கள், மேம்படுத்தப்பட்ட கழிவுகள் விலக்குகள் விஷேட முதலீட்டு முறைகள் |
| பெறுமதி சேர் வரி (VAT) | விலக்குகள் முன்னுரிமை விகிதங்கள் கருத்திட்டத்திற்கேற்ற குறிப்பிட்ட, சலுகைகள் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகள் அல்லது செயல்பாடுகளுக்கான குறிக் கோ-ளுடைய சலுகை |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) | குறிப்பிட்ட பொருட்கள், சேவைகள் அல்லது செயல்பாடுகளுக்கான விலக்குகள் கருத்திட்டத்திற்கேற்ற குறிப்பிட்ட, சலுகைகள், வரி விதிக்கக்கூடிய மொத்த வரு-மானத்திலிருந்தான விலக்குகள் |
| உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (XID) | விலக்குகள்: முன்னுரிமை விகிதங்கள் தயாரிப்புக்கேற்ற சலுகைகள் குறிப்பிட்ட பயன்பாடுகள் அல்லது செயல்பாடுகளுக்கான சலுகைகள் |
| சுங்க இறக்குமதி தீர்வை (CID) | இறக்குமதி வரி விலக்குகள்: முன்னுரிமை விகிதங்கள் முதலீடு தொடர்பான சலு-கைகள் கருத்திட்டத்திற்கேற்ற குறிப்பிட்ட, சலுகைகள், குறிப்பிட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் அல்லது உள்ளீடுகளுக்கான சலுகைகள் |
| மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV) | குறிப்பிட்ட வகை மோட்டார் வாகனங்களுக்கான விலக்குகள் அல்லது முன்னுரிமைச் சலுகை |

**அட்டவணை 1.2 – வரிச் செலவின வகைப்பாடு**

| வரிச் செலவின வகை | விபரம் |
|---|---|
| விலக்குகள் | குறிப்பிட்ட வருமானம், பொருட்கள், சேவைகள், பரிவர்த்தனைகள், செயல்பாடுகள் அல்லது வரி செலுத்துவோரை வரி அடிப்படையிலிருந்து விலக்குகிறது. |
| முன்னுரிமை விகிதம் | குறிப்பிட்ட வரி செலுத்துவோர், வருமானம், பொருட்கள், சேவைகள் அல்லது செயல்பாடுகளுக்கு ஒப்பீட்டு அளவுகோல் விகிதத்திற்குக் குறைவான விகிதத்தைப் பிரயோகித்தல். |
| வரி விடுமுறை | ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முழு அல்லது பகுதி விலக்கு அளிக்கிறது. |
| சிறப்பு வலயங்கள் | ஒரு குறிப்பிட்ட துறை, கருத் திட்டம், புவியியல் பகுதி அல்லது வரி செலுத்து வோர் குழுவிற்கு ஒரு தனித்துவமான வரி விதிப்பு முறையை வழங்குகிறது. |
| முதலீடு / மூலதன மீட்பு ஊக்குவிப்புத்தொகை | ஒப்பீட்டு அளவுகோலின் கீழ் இருப்பதை விட முதலீட்டுச் செலவினங்களை விரைவாகவோ அல்லது தாராளமாகவோ திரும்பப் பெற அனுமதிக்கிறது. |
| மேம்படுத்தப்பட்ட கழிவு/ முற்பணம் | ஒப்பீட்டு அளவுகோலின் கீழ் சாதாரணமாகக் கிடைக்கும் தொகையை விட அதிகமான விலக்குகளை அனுமதிக்கிறது. |
| வரிக்கடன் | செலுத்த வேண்டிய வரியை ஒரு குறிப்பிட்ட தொகையால் குறைக்கிறது. |
| தள்ளுபடி / திரும்பப் பெறுதல் | குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் செலுத்தப்பட்ட வரியைத் திரும்ப அளிக்கிறது அல்லது வரிப் பொறுப்பைக் குறைக்கிறது. |
| வரி ஒத்திவைப்பு | வரிக் கொடுப்பனவு அல்லது வரி விதிக்கக்கூடிய வருமானத்தை அங்கீகரிக்கும் நேரத்தை ஒத்திவைக்கிறது. |
| மதிப்பீட்டுச் சலுகை | ஒரு முன்னுரிமை மதிப்பீட்டு விதி அல்லது தொகையைப் பயன்படுத்தி வரி விதிக்கக்கூடிய பெறுமானத்தை தீர்மானிக்கிறது. |
| வரம்பு / விலக்கு | வரையறுக்கப்பட்ட வரம்பிற்குக் கீழே அல்லது அதற்குள், ஒப்பீட்டு அளவுகோல் முறையிலிருந்து வேறுபடும் குறிப்பிட்ட வரி செலுத்துவோர் அல்லது செயல்பாடு களை விலக்குகிறது. |
| துறைரீதியான /இடவாரியான குறிப்பிட்ட சலுகை | குறிப்பிட்ட தொழில்கள், செயல்பாடுகள் அல்லது புவியியல் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. |

**வரிச் செலவினத்திற்கான அறிவார்ந்த அடிப்படை**

ஒரு வரிச் செலவினத்தின் வடிவம், முன்னுரிமைச் சலுகை எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை விவரிக்கிறது, அதேசமயம் அதன் கொள்கை ரீதியான அறிவார்ந்த அடிப்படை அந்த நடவடிக்கை ஏன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குகிறது.

**அட்டவணை 1.3 வரிச் செலவினத்திற்கான பிரதான கொள்கை அறிவார்ந்த அடிப்படை**

| கொள்கை அறிவார்ந்த அடிப்படை | பிரதான நோக்கம் |
|---|---|
| முதலீட்டு ஊக்குவிப்பு | முதலீட்டின் வரிக்குப் பிந்தைய செலவைக் குறைப்பதுடன் முதலீட்டை ஈர்க்க அல்லது விரிவுபடுத்தல் |
| பொருளாதார வளர்ச்சி மற்றும் உற்பத்தித் திறன் | மூலதன உருவாக்கம், உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் விரி-வாக்கத்தை ஊக்குவித்தல் |
| வேலைவாய்ப்பு உருவாக்கம் | வேலைவாய்ப்பை உருவாக்கும் அல்லது பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல். |
| ஏற்றுமதி ஊக்குவிப்பு | ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகளின் போட்டித்தன்மையை மேம்படுத்தல் |
| துறைசார் வளர்ச்சி | பொருளாதார ரீதியாகவோ அல்லது மூலோபாய ரீதியாகவோ முக்கியமானதாகக் கருதப்படும் துறைகளுக்கு ஆதரவளித்தல். |
| பிராந்திய வளர்ச்சி | குறிப்பிட்ட பிராந்தியங்களில் முதலீடு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் |
| சமூகப் பாதுகாப்பு | குறிக்கோளுடைய ஆதரவு தேவைப்படும் தனிநபர்கள் அல்லது குழுக்களின் மீதான வரிச்சுமையைக் குறைத்தல் |
| அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் நியாய விலை | அத்தியாவசியமான அல்லது சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிவிதிப்பைக் குறைத்தல் |
| ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் | ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டை ஊக்குவித்தல் |
| சிறு மற்றும் நடுத்தர நிறுவனங் களின் வளர்ச்சி | சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை நிறுவுதல், முறைப்படுத்துதல் மற்றும் விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தல் |
| விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி | விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல். |
| சுற்றுச்சூழல் சார் குறிக்கோள்கள் | சுற்றுச்சூழலுக்கு உகந்த முதலீடு மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் |
| சர்வதேசப் போட்டித்திறன் | சர்வதேச அளவில் போட்டியிடும் வணிகங்கள் எதிர்கொள்ளும் வரி தொடர்பான பாதகங்களைக் களைதல் |
| மூலோபாய அபிவிருத்தி திட்டங்கள் | தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகக் கருதப்படும் திட்டங்களுக்கு வசதி செய்து கொடுத்தல். |
| நிர்வாக எளிமையாக்கம் | விகிதாசாரமற்ற இணக்க மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல் |
| சர்வதேசக் கடமைகள் | ஒப்பந்தம், வர்த்தகம் மற்றும் பிற சர்வதேச கடமைகளைச் செயல்படுத்துதல் |
| இரட்டை வரிவிதிப்பு/ அடுக்க வரிவிதிப்பைத் தவிர்த்தல் | எதிர்பாராத பலமுறை வரிவிதிப்பைத் தடுத்து, வரி அமைப்பின் ஒருமைப் பாட்டைப் பாதுகாத்தல் |

ஒரே வகையான வரிச் செலவினம் வெவ்வேறு நோக்கங்களை அடையக்கூடும், அதே சமயம் ஒரே கொள்கை நோக்கம் வெவ்வேறு வரிக் கருவிகள் மூலம் நிறைவேற்றப்படலாம். அதன்படி, 2025/2026 வரிச் செலவினப் பட்டியலானது, வரிச் செலவின பொறிமுறை மற்றும் அதன் அடிப்படையான கொள்கை அறிவார்ந்த அடிப்படை ஆகிய இரண்டையும் அடையாளம் காட்டுகிறது.

### 1.4 ஒப்பீட்டு அளவுகோல் வழிமுறைமை

ஒப்பீட்டு அளவுகோல் வழிமுறைமை என்பது வரிச் செலவினங்களை அடையாளம் காணவும் அளவிட வுமான ஒரு அடிப்படைப் புள்ளியை வழங்குகின்றது. இது தொடர்புடைய வரிச் சட்டங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்படும் விலக்குகள், கழிவுகள், முன்னுரிமை வரி விகிதங்கள், வரி விடுமுறைகள், படிகள், வரிக் கடன் சலுகைகள், வரி ஒத்திவைப்புகள் மற்றும் பிற சலுகைகள் ஆகியவற்றிற்கான பொதுவாகப் பொருந்தக் கூடிய வரி நடைமுறையைக் குறிக்கிறது.

இந்த ஒப்பீட்டு அளவுகோல் வழிமுறைமை , ஒவ்வொரு வரிக்கும் தனித்துவமானது வருமான வரி, நுகர்வு வரி, கலால் வரி மற்றும் சுங்க வரி ஆகியவற்றின் வெவ்வேறு சட்ட மற்றும் கட்டமைப்பு அம்சங்களை இது பிரதிபலிக்கிறது. எனவே, ஒவ்வொரு வரிக்கும் உரிய ஒப்பீட்டு அளவுகோல் வழிமுறைமையானது அந்த வரியின் வரி விதிப்பு அலகு, வதிவிடம் அல்லது பிராந்திய அடிப்படை, வரி விதிப்புக் காலம், வரி அடிப்படை, விகிதக் கட்டமைப்பு, பதிவு செய்வதற்கான வரம்பு மற்றும் வரி அமைப்பின் பிற அடிப்படை அம்சங்களைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

“வரிச் செலவின அறிக்கை 2024/2025இல் பின்பற்றப்பட்ட அதே வழிமுறையைப் பின்பற்றி, “2025/2026 அறிக்கையிலும் “‘முன்னுரிமைச் சட்ட அணுகுமுறை“ கையாளப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின்படி, ஒரு வரி முறை பொருளாதார அல்லது கொள்கை ரீதியாக எப்படி இருக்க வேண்டும் என்ற மதிப்பீட்டிற்கு அப்பால் அந்த வரிக்குரிய சாதாரண நியதிச் சட்டக் கட்டமைப்பிலிருந்தே ஒப்பீட்டு அளவுகோல் முறை பெறப்படுகிறது.

எனவே, இந்த ஒப்பீட்டு அளவுகோல் வரி முறையில், ஒரு குறிப்பிட்ட வரி அமைப்பின் அடிப்படை அல்லது கட்டமைப்பு அம்சங்களாகக் கருதப்படும் விதிகளைக் கூட்டிணைக்கும். இதில் சாதாரண வரி அடிப்படை, பொதுவாகப் பொருந்தக்கூடிய வரி விகிதங்கள், முன்னோக்கிய விகிதக் விகிதக் கட்டமைப்புகள் ,வரம்புகள், சாதாரண கழிவுகள் மற்றும் கொடுப்பனவுகள், உள்ளீட்டு வரி வரவுகள் மற்றும் வரி முறையாகச் செயல்படுவதற்குத் தேவையான பிற விதிகள் ஆகியவை உள்ளடங்கும்.

ஒரு வரி ஏற்பாடானது, பிரயோகிக்கத்தக்க ஒப்பீட்டு அளவுகோல் தொடர்பாக முன்னுரிமையை வழங்கி னால், அது “வரிச் செலவினம்“ என்று அடையாளம் காணப்படுகிறது. ஒரு வரி விதிப்பு செலுத்த வேண்டிய வரியைக் குறைக்கிறது என்பதற்காக மட்டுமே அது “வரிச் செலவினம்“ ஆகிவிடாது. வரிச் சட்டங்கள் வெவ்வேறு வரி செலுத்துவோர், செயல்பாடுகள், உற்பத்திகள், அல்லது வருமான வகைகளுக்கு வெவ்வேறு வரி விகிதங்கள், வரம்புகள் அல்லது நடைமுறைகளை வழங்கும் நிலையில் இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்வது மிக முக்கியமாகும். இத்தகைய வேறுபாடுகள், வரியின் சாதாரண கட்டமைப்பிலிருந்து கொள்கை ரீதியாக மேற்கொள்ளப் பட்ட மாற்றங்களாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே “வரிச் செலவினங்கள்“ எனக் கருதப்படும்.

இந்த ஒப்பீட்டு அளவுகோலானது ஒரு பொறிமுறைசார் குறிப்புப் புள்ளியாக இருப்பதுடன், இது மிகச் சிறந்த வரி கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தம் ஒரு நெறிமுறை சார்ந்த தீர்ப்பு அல்ல.

“2025/2026 அறிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அளவுகோல் வரி முறை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

**அட்டவணை 1.4 பிரதான ஒப்பீட்டு அளவுகோல் வரைகூறு ஒருபார்வை**

| வரி | வரியிடல் அலகு | ஒப்பீட்டு அளவுகோல் சிகிதம் |
|---|---|---|
| நிறுவன வருமான வரி (CIT) | நிறுவனம் அல்லது ஏனைய வரிக்குட்பட்ட அமைப்பு | 30 சதவீத அளவிலான நிலையான விகிதம் |
| தனிநபர் வருமான வரி (PIT) | தனிநபர் வரி செலுத்துபவர் | 6 முதல் 36 சதவீதம் வரையிலான படிப்படி யான கட்டமைப்பு |
| பெறுமதி சேர் வரி (VAT) | வரிக்குட்பட்ட நபர் (வரிக்குட்பட்ட வழங்கல்கள் மற்றும் இறக்குமதிகள்) | 18 சதவீத அளவிலான நிலையான பொது விகிதம் |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) | சட்டப்பூர்வ எல்லைக்குள் வரிக்குட் பட்ட நபர் | வரிக்கு உட்பட்ட மொத்த விற்பனையின் 2.5 சதவீதம் |
| உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி (XID) | குறிப்பிட்ட கலால் வரிக்குட்பட்ட பொருள் | ஒவ்வொரு பொருளுக்கும் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட விகிதம் |
| சுங்க இறக்குமதி தீர்வை (CID) | இறக்குமதி பரிவர்த்தனை மற்றும் பண்டம் (HS வகைப்பாடு) | HS வகைப்பாட்டின் அடிப்படையிலான நிலையான வரி விகிதம் |
| மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV) | சட்டப்பூர்வ எல்லைக்குள் அடங்கும் மோட்டார் வாகனம் | வாகன வகைக்கேற்ற குறிப்பிட்ட வரி விகிதம் மற்றும் எல்லை |

இக்கூற்றானது பின்வரும் வரிகளை உள்ளடக்கியுள்ளது. நிறுவன வருமான வரி (CIT), தனிநபர் வருமான வரி (PIT), பெறுமதி சேர் வரி (VAT) சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரி (XID) சுங்க இறக்குமதி தீர்வை (CID), மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV) என்பனவாகும். ஒரு ஏற்பாடு வரிச் செலவாக இனங்காணப்பட்டு, அதை நம்பகமான முறையில் அளவிட முடியாத பட்சத்தில், ஆதாரமற்ற மதிப்பீட்டை முன்வைப்பதற்குப் பதிலாக, அது தனித்தனியாக வெளிப்படுத்தப்படுகின்றது.

### 1.4.1 நிறுவன வருமான வரி

வரிவிதிப்பு அலகு

வரி விதிப்பு அலகின் ஒப்பீட்டு அளவுகோலானது நிறுவன வருமான வரிக்குட்பட்ட (CIT) நிறுவனம் அல்லது அமைப்பு

வதிவிடம்

இந்த ஒப்பீட்டு அளவுகோலானது, இலங்கையில் ஈட்டப்படும் அல்லது இலங்கையிலிருந்து பெறப்படும் வருமானத்தின் மீதான வரி விதிப்பு தொடர்பான விதிகள் உட்பட, வதிவிட மற்றும் வதிவிடமற்ற நிறுவனங்களுக்கு இடையிலான சட்டரீதியான வேறுபாட்டைக் கணக்கில் கொள்கிறது.

ஒரு நிறுவனமொன்று இலங்கையில் ஒரு வருட மதிப்பீட்டுக்காக வதிக்கும் பட்சத்தில்:

அ) அது இலங்கைச் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது அல்லது உருவாக் கப்பட்டுள்ளது.

ஆ) அது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது அல்லது பிரதான அலுவலகம் உள்ளது அல்லது

இ) வருடத்தின் எந்த நேரத்திலும் நிறுவனத்தின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இலங்கையில் செயல்படுத்தப்படுகின்றன.

வரிவிதிப்பு காலம்

ஒப்பீட்டு அளவுகோல் வரிவிதிப்பு காலமானது பிரயோ கிக்கத்தகு விதிமுறைகளுக்கு உட்பட்டு பொதுவாக அடுத்துவரும் ஆண்டின் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையான மதிப்பீட்டு ஆண்டு ஆகும்.

வரி அடிப்படை

ஒப்பீட்டு அளவுகோல் வரி அடிப்படையானது நிறுவனத்தின் வரிஅறவிடப்படக் கூடிய வருமான மாக இருப்பதுடன், இது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படுகின்றது. வதிவுடமை நிறுவனங்களின் உலகளாவிய வருமானத் தின் மீது வரி விதிக்கப்படுகின்றன. சில வகையான வருமானங்களுக்கு விலக்குகள் கிடைக்கின்றன. கிடைக்கக்கூடிய இடங்களில் இரட்டை வரி தவிர்ப்பு உடன்படிக்கைகளுக்கு உட்பட்டு இலங்கையில் ஈட்டும் / திரட்டப்படும் வருமானத்தின் மீது வதிவற்ற கம்பனிகள் வரி விதிக்கப்படுகின்றன.

விசேட குறிப்புகள் –

- அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக் களங்கள் நிறுவன வருமான வரிக்கு பொறுப்பேற்காது. இது ஒப்பீட்டு அளவுகோல் வருமான வரி முறைமையின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.
- இரட்டை வரிவிதிப்பிலிருந்து நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் ஒப்பீட்டு அளவுகோல் வருமான வரி முறைமையின் ஒரு பகுதியாக கருதப்படுகின்றன.

வரி வீதங்கள் –

நிலையான நிறுவன வருமான வரி வீதமானது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் கணக்கீட்டு இலாபத்தின் நிலையான தேய்மான விகிதங்கள் உள்ளிட்ட விரிவான சீரமைப்பிற்கு உட்பட்ட வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் மீது 30 சதவீதம் எனும் அடிப்படை ஒப்பீட்டு அளவுகோல் வீதத்தை பயன்படுத்தப்படுகிறது.

வரி அமைப்பு, குறிப்பிட்ட செயல்பாடுகள் அல்லது வருமான வகைகளுக்கென பிரத்தியேக சட்டப்பூர்வ விகிதங்களையும் வழங்குகிறது. அத்தகைய விகிதங்கள், ஒப்பீட்டு அளவுகோலைத் தீர்மானிப்பதில் தனியாக அடையாளம் காடடுகின்றன. மேலும் அவை நிலையான விகிதத்திலிருந்து வேறுபடுகின்றன என்ற ஒரே காரணத்திற்காகத் தானாகவே வரிச் செலவினங்களாகக் கருதப்படுவதில்லை.

### 1.4.2 தனிநபர் வருமான வரி

வரிவிதிப்பு அலகு

வரி விதிப்பு அலகின் ஒப்பீட்டு அளவுகோல் அலகானது தனிப்பட்ட வரிசெலுத்துனராகும்.

வதிவிடம்

இந்த அளவுகோலானது, சட்டபூர்வ வதிவிட மற்றும் வருமான மூல விதிகளின்படி, இலங்கையில் வசிப்பவர்கள் மற்றும் வசிக்காத நபர்களுக்கு இடையே வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. எனவே, வருமானம் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பது, அந்த வருமானத்தின் தன்மை மற்றும் ஆதாரம், அத்துடன் வரி செலுத்துபவரின் வதிவிட நிலை ஆகியவற்றைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஒரு நபர், ஒரு மதிப்பீட்டு ஆண்டில் இலங்கையில் வசிப்பவராகக் கருதப்பட வேண்டுமானால், அவர் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:தனிநபர் பின்வரும் நிலைமைகளின் மதிப்பீட்டு வருடத் திற்கு இலங்கையில் வதிப்பவராக இருந்தால்:,

அ) இலங்கையில் வசிக்கிறார்

ஆ) வருடத்தில் ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதேனும் பன்னிரண்டு மாதக் காலப்பகுதியில் மொத்தமாக நூற்று எண்பத்தி மூன்று நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் இலங்கையில் சமூகமளித்தவர்.

இ) இலங்கை அரசாங்கத்தின் ஊழியர் அல்லது உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அவரது வாழ்க்கைத் துணை வருடத்தின் போது வெளிநாட்டில் பணியமர்த்தப்பட்டிருத்தல். அல்லது

ஈ) வணிகக் கப்பல் சட்டத்தின் அர்த்தத்திற்கு அமைய, தனிநபர் அவ்வாறு தொழில் புரியும் காலப்பகுதியில், இலங்கைக் கப்பல் ஒன்றில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு தனிநபர் ஆவார்.

வரிவிதிப்பு காலம்

ஒப்பீட்டு அளவுகோல் வரி விதிப்பு காலமானது மதிப்பீட்டாண்டாக இருப்பதுடன், பொதுவாக ஏப்ரல் 1ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

வரி அடிப்படை

ஒப்பீட்டு அளவுகோல் வரி அடிப்படையானது தனி நபரின் வரி விதிக்கக்கூடிய வருமானமாகும். ஒரு வதிவிட தனிநபரை பொறுத்தவரையில், அந்த ஆண்டிற்கான வேலைவாய்ப்பு, வணிகம், முதலீடு அல்லது பிற ஆதாரத்திலிருந்தான அவரது வருமானம் (எங்கிருந்து எழுந்தாலும்). வதிவற்றோர் ஒருவரைப் பொறுத்த வரையில், அந்த வருடத்திற்கான தொழில், வியாபாரம், முதலீடு அல்லது வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், இலங்கையில் உள்ள ஒரு மூலத்தில் எழும் அல்லது அதிலிருந்து பெறப்படுகின்ற வருமானம்.

வரி விகிதம்:

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக, தகுதியுள்ள வதிவிட தனிநபர்கள் மற்றும் வதிவிடமற்ற பிரஜைகளுக்கு பொருந்தக்கூடிய ஒப்பீட்டு அளவுகோல் முற்போக்கு வரி விகிதக் கட்டமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

**அட்டவணை 1.5 தனிநபர் வருமானவரி: ஒப்பீட்டு அளவுகோல் வரி விகித அமைப்பு**

| வரம்பு | வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூபா) | வீதம் | வரி வரம்பு (ரூபா) | ஓட்டு மொத்த வரி |
|---|---|---|---|---|
| 1 | ரூபா. 1.8 மில்லியன் - Rs. 2.8 மில்லியன் | 6% | 60,000 | 60,000 |
| 2 | ரூபா. 2.8 மில்லியன் - Rs. 3.3 மில்லியன் | 18% | 90,000 | 150,000 |
| 3 | ரூபா. 3.3 மில்லியன் - Rs. 3.8 மில்லியன் | 24% | 120,000 | 270,000 |
| 4 | ரூபா. 3.8 மில்லியன் - Rs. 4.3 மில்லியன் | 30% | 150,000 | 420,000 |
| 5 | ரூபா. 4.3 மில்லியன் இற்கு மேல் | 36% | — | — |

தகுதியுள்ள வதிவிட தனிநபர்கள் மற்றும் வதிவிடமற்ற பிரஜைகளுக்கு, 2025 ஏப்ரல் 1, அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு இந்த விகிதங்கள் பொருந்தும். வரி வரம்பு மற்றும் திரட்டப்பட்ட வரி ஆகியவை காட்டப்பட்டுள்ள சட்டப்பூர்வ விகிதங்களிலிருந்து கணக்கிடப்படுகின்றன.

எனவே, ஒரே ஒரு ஒப்பீட்டு அளவுகோல் விகிதத்தைப் பயன்படுத்துவதை விட படிப்படியான கட்டமைப்பு அளவுகோலின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படுகிறது.

**கட்டமைப்பு நிவாரணம்**

தகுதியுள்ள வரி செலுத்துவோருக்கு 2025 ஏப்ரல் 1, முதல் பொருந்தக்கூடிய, ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டிற்கும் ரூ. 1.8 மில்லியன் தனிநபர் நிவாரணம், தனிநபர் வருமான வரி (PIT) அமைப்பின் சாதாரண கட்டமைப்பின் ஒரு பகுதியாக உருவாவதுடன் இது ஒப்பீட்டு அளவுகோலில் இணைக்கப்பட்டுள்ளது.

**விஷேட அறிவித்தல்**

- ஒரு நம்பிக்கை நிதியம் மூலமாகவோ அல்லது திறைசேரிப் பத்திரம்/ முறி மூலமாகவோ ஈட்டப்படும் வருமானம், முதலீட்டு மட்டத்தில் வரி விதிக்கப்படாமல் ஒரு பயனாளருக்குச் சென்றடைவதற்கான சாத்தியக்கூறு, ஒப்பீட்டு அளவுகோல் வருமான வரி அமைப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

### 1.4.3 பெறுமதி சேர் வரி

வரிவிதிப்பு அலகு

வரிவிதிப்பு அலகின் ஒப்பீட்டு அளவுகோலானது, பொருட்கள் அல்லது சேவைகளின் வரி விதிக்கக்கூடிய வழங்கல் ஆகும்.

வரிவிதிப்பு காலம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் நாள், ஏப்ரல் முதல் நாள், ஜூலை முதல் நாள் மற்றும் அக்டோபர் முதல் நாள் தொடங்கும் ஒரு மாதம் அல்லது மூன்று மாத காலம் ஆகும்.

வரி அடிப்படை

வரி அடிப்படை என்பது, சட்டப்பூர்வ மதிப்பீட்டு விதிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டு, சாதாரண, உள்ளீட்டு வரி வரவு நடைமுறையைப் பயன்படுத்திய பிறகு கணக்கிடப்படும், வரிக்கு உட்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமானத்தைக் குறிக்கிறது.

வரி விகிதம்

பெறுமதி சேர் வரியின் (VAT) பொதுவான விகிதமான 18 சதவீதம், முதன்மையான அடிப்படை வரி விகிதமாக அமைகிறது.

பதிவு வரையறை

வரிவிதிக்கப்படக்கூடிய வழங்கல்களின் பெறுமதி காலாண்டொன்றுக்கு ரூபா 15 மில்லியன் அல்லது வருடாந்தம் ரூபா 60 மில்லியனுக்கு மேற்பட்டவை.

### 1.4.4 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு

வரி விதிப்பு அலகு

சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டின் சட்ட வரம்பிற்குள் ஒரு செயல்பாட்டை மேற்கொள்ளும் வரிக்குரிய நபரே, வரி விதிப்பிற்கான அடிப்படை அலகாகக் கருதப்படுகிறார்.

வரி விதிப்புக் காலம்

இந்த வரி, குறிப்பிட்ட கால இடைவெளியைக் கொண்ட வரி விதிப்புக் காலத்திற்கு நிர்ணயிக்கப்படு கிறது. பொறுப்புள்ள காலாண்டு செலுத்துபவர் என்பவர் ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான கலண்டர் ஆண்டிற்கான காலாண்டு வரி செலுத்துபவர் ஆவார்.

வரி அடிப்படை

வரி அடிப்படையானது, மொத்த விற்பனை அல்ல, மாறாக வரிக்கு உட்பட்ட விற்பனை ஆகும். மேற்கொள்ளப்படும் செயல்பாட்டின் தன்மையைப் பொறுத்து, மொத்த விற்பனையின் எந்தப் பகுதியை வரிக்கு உட்பட்ட விற்பனையாக கருத வேண்டும் என்பதற்கான விகிதாசாரங்களைச் சட்டங்கள் வரையறுக்கின்றன.

ஒவ்வொரு வரி விதிக்கக்கூடிய நபரும்:

அ) ஏதாவது உருப்படிகளை இறக்குமதி செய்தல்

ஆ) எந்தவொரு பொருளையும் உற்பத்தி செய்யும் வணிகத்தை மேற்கொள்கின்றவர்

இ) எந்தவொரு விவரத்தின் சேவையையும் வழங்கும் வணிகத்தை மேற்கொள்கின்றவர்

ஈ) எந்தவொரு உருச்சத்தையும் மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ இறக்குமதி செய்து விற்பனை செய்பவர்

வரி விகிதம்

அடிப்படை வரி விகிதம், வரிக்கு உட்பட்ட மொத்த விற்பனையின் 2.5 சதவீதமாகும்.

பதிவு வரையறை

மொத்த விற்பனையின் ஒரு காலாண்டிற்கு ரூ. 9 மில்லியன் அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு ரூ. 36 மில்லியன் என்ற அளவைத் தாண்டும் பட்சத்தில்,

### 1.4.5. உற்பத்தித் தீர்வை (விஷேட ஏற்பாடுகள்)

வரி விதிப்பு அலகு

2025 சனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட, 2418/43 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித் தலில் குறித்துரைக்கப்பட்ட கலால் வரிக்கு உட்பட்ட பொருட்கள்.

வரி விதிப்புக் காலம் / வரி விதிப்புப் புள்ளி

சட்டப்பூர்வமாக வரையறுக்கப்பட்ட வரி விதிப்புப் புள்ளியில், பொதுவாக ஒரு குறிப்பிட்ட பொருள் உற்பத்தி செய்யப்படும்போதோ அல்லது இறக்குமதி செய்யப்படும்போதோ வரிப் பொறுப்பு ஏற்படுகிறது.

வரி அடிப்படை

ஆண்டு முழுவதும் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட, உற்பத்தித் தீர்வைக்கு உட்பட்ட பொருட்களின் மொத்த அளவு.

வரி விகிதம்

2025 சனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட, 2418/43 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை.

### 1.4.6. இறக்குமதி தீர்வை:

வரிவிதிப்பு அலகு

வரி விதிப்பின் அடிப்படை அலகு என்பது இறக்குமதி பரிவர்த்தனை மற்றும் அதனுடன் தொடர்புடைய இறக்குமதி செய்யப்பட்ட பண்டம் ஆகும் இவை, நடைமுறையில் உள்ள "ஒத்திசைக்கப்பட்ட முறைமை" HS) வகைப்பாட்டின்படி வகைப்படுத்தப்படுகின்றன.

வரிவிதிப்பு காலம்/ வரி விதிப்புப் புள்ளி

இறக்குமதிப் புள்ளி (ஒரு முறை பரிவர்த்தனை). அறிக்கையிடுவதற்கு, மதிப்புகள் நிதியாண்டிற்கான ஒருங்கிணைக்கப்படுகின்றன.

வரி அடிப்படை– சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 235 ஆம் அத்தியாயம் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் (WTO) சுங்க மதிப்பீட்டு உடன்படிக்கையின் கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் செலவு, காப்புறுதி, சரக்கு (CIF) பெறுமதி.

வரி வீதங்கள் - விசேட திட்டங்கள் அல்லது ஒப்பந்தங்களின் கீழ் வழங்கப்பட்ட எந்தவொரு முன்னுரிமை அல்லது சலுகை வீதங்களையும் தவிர்த்து, பாரபட்சமற்ற, மிகவும் சாதகமான தேசிய (MFN) அடிப்படையில் அனைத்து இறக்குமதிகளுக்கும் ஏற்புடையதான நியதிச்சட்ட சுங்கவரி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நியதிச்சட்ட சுங்க வரி வீதங்கள்.

### 1.4.7. மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV):

வரிவிதிப்பு அலகு

சொகுசு வரியின் சட்டப்பூர்வ வரம்பிற்குள் வரும் மோட்டார் வாகனமே, வரி விதிப்பிற்கான அடிப்படை அலகாகும்.

வரிவிதிப்பு காலம் / வரி விதிப்புப் புள்ளி – இலங்கை சுங்கத்துறையிலிருந்து மோட்டார் வாகனத்தை நீக்கும் போது

வரி அடிப்படை – இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் பொருத்தீடு செய்யப்பட்ட வாகனங்கள்

வரி வீதம் – 2025 ஜனவரி 31 ஆம் திகதியிடப்பட்ட 2421/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூ லம் இறுதியாக திருத்தப்பட்டவாறு 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2147/72 மூலம் வரையறுக்கப்பட்ட சொகுசு வரி வீதம்.

ஒப்பீட்டு அளவுகோல் அணுகுமுறை

2025 / 2026 அறிக்கையின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு வரிக்குமான ஒப்பீட்டு அளவுகோலானது, தொடர்புடைய வரி செலுத்துவோர், வருமானம், வழங்கல், பரிவர்த்தனை, பண்டம் அல்லது தயாரிப்புக்குப் பொருந்தக்கூடிய சாதாரண சட்டப்பூர்வ நடைமுறையைக் கொண்டு நிறுவப்படுகிறது. இந்த அணுகுமுறையானது, வரிச் செலவினங்களைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் சட்ட மற்றும் கட்டமைப்பு அளவுருக்களின் மிகவும் தெளிவான விளக்கத்தை வழங்கும் அதே வேளையில், 2024/2025 வழிமுறையின் சாராம்சத்தையும் தொடர்ச்சியையும் பாதுகாக்கிறது.

### 1.5 கட்டமைப்பு நிவாரணங்கள்

ஒரு கோட்பாட்டு அல்லது எளிமைப்படுத்தப்பட்ட வரி அடிப்படையுடன் ஒப்பிடும்போது வரியைக் குறைக்கும் ஒவ்வொரு விதியும் ஒரு வரிச் செலவினமாக அமைவதில்லை. சில விதிகள் வரி அமைப்பின் கட்டமைப்பு அம்சங்களாகும், மேலும் அவை தொடர்புடைய வரியின் நோக்கம், செயல்பாடு மற்றும் ஒருமைப் பாட்டை வரையறுக்க அவசியமானவை.

2025/2026 அறிக்கையின் நோக்கங்களுக்காக, ஒரு விதியானது வரியின் சாதாரண வடிவமைப்பிற்கு ஒருங்கிணைந்ததாக இருக்கும்போது அது கட்டமைப்பு விதியாகக் கருதப்படுகிறது, இதில் பின்வருவன அடங்கும்:

- அடிப்படை வரி அடிப்படை அல்லது விகிதக் கட்டமைப்பை நிறுவுதல்
- வரி விதிக்கக்கூடிய அலகு அல்லது பதிவு வரையறையை வரையறுத்தல்
- இரட்டை வரிவிதிப்பு அல்லது அடுக்கு வரி விதிப்பைத் தடுத்தல்
- சர்வதேச வரி அல்லது வர்த்தகக் கடமைகளுக்குச் தாக்கத்தை ஏற்படுத்துதல்
- நிர்வாகச் சாத்தியக்கூற்றை உறுதி செய்கிறது அல்லது
- வரியின் உத்தேசிக்கப்பட்ட செயல்பாட்டைப் பாதுகாக்கிறது.

**அட்டவணை 1.6 - இலங்கையின் வரிமுறையில் கட்டமைப்பு நிவாரணங்கள்**

| வரி வகை | ஏற்பாடுகள் |
|---|---|
| தனிநபர் வருமான வரி | வருமான வரி விதிக்கப்படாத தனிநபர் நிவாரணம் |
| | PIT முற்போக்கான விகித அட்டவணை |
| தனிநபர் வருமான வரி/நிறுவன வருமான வரி | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அட்டவணை III இல் கொடுக்கப்பட்டுள்ள விலக்கு தொகைகள் |
| | இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தின் கீழ் ஒரு நாட்டால் ஒப்புக் கொள்ளப்பட்ட முன்னுரிமை முறைமை |
| | தனிப்பட்ட பங்குதாரர்கள் பெறும் பங்கிலாப வருமானத்திற்கான குறைந்த நிலையான வரி விகிதம். |
| | முதலீட்டுச் சொத்தை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் |
| நிறுவன வருமான வரி | ஊழியர் சேமலாப நிதிகள், வருங்கால வைப்பு நிதிகள் அல்லது ஓய்வூதிய நிதிகள் மற்றும் பணிநீக்க கொடைகளின் வரி விதிக்கக்கூடிய வருமானத்திற்கு பொருந்தக்கூடிய குறைந்த வரி விகிதம். |
| | தொண்டு நிறுவனங்களின் வரி விதிக்கக்கூடிய வருமானத்திற்கு பொருந்தக்கூடிய குறைந்த வரி விகிதம். |
| | பல்வேறு சொத்துக்களுக்குப் பொருந்தக்கூடிய வரி தேய்மான விகிதங்கள் |
| பெறுமதி சேர் வரி | வரி விதிக்கக்கூடிய விநியோக வரம்புக்குக் கீழே, பெறுமதி சேர் வரிப் பதிவு கட்டாயமில்லை. |
| | சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள நிறுவனங்கள் மீள் ஏற்று மதிக்காக இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு பெறுமதி சேர் வரி விலக்கு. |
| | அரசாங்கத்தால் வழங்கப்படும் சேவைகளுக்கு விலக்கு |
| | எவரொருவராலும் கல்விக்காக வழங்கப்படும் சேவைகளுக்கு விலக்கு |
| | பயணிகள் பொதுப் போக்குவரத்து சேவைகள் |
| | 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் விதிகள் பொருந்தும் இராஜதந்திர பணிகள் மற்றும் பணியாளர்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகள்: இலங்கையிலிருந்து அவர்களின் எதிர் பகுதிகளுக்கு பரஸ்பர நன்மைகள் கிடைக்கும் என ஆணையாளர் நாயகத்தினால் அடையாளம் காணப்பட்டால் |
| | இயற்கை அல்லது மனித பேரழிவுகளால் ஏற்படும் திடீர் துயரங்களை நிவர்த்தி செய்வதற்காக அல்லது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்தில் கொண்ட எந்தவொரு செயலுக்கும் வெளிநாட்டு அமைப்புகளால் நேரடியாக நிதியளிக்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் |
| | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு கருமபீடத்திற்கு அப்பால் அமைந்துள்ள ஒரு உணவகத்தில் சேவைகள் |
| | எந்தவொரு நிறுவனம் அல்லது நபரால் அடக்கம் மற்றும் தகனம் தொடர்பான சேவைகள் |
| சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | பதிவு வரம்பிற்குக் கீழே புரள்வு |
| பெறுமதி சேர் வரி/சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு/ சுங்க இறக்குமதித் தீர்வை | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுக்கு உட்பட்ட எந்தவொரு பொருளும் இறக்குமதி செய்யப்பட்டால், இந்த வரிகள் விலக்கு அளிக்கப்படும். |
| சுங்க இறக்குமதித் தீர்வை | சர்வதேச ஒப்பந்தங்களுக்கு இணங்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின்படி குறைக்கப்பட்ட சுங்க இறக்குமதித் தீர்வை |
| | மீள் ஏற்றுமதிக்காக பிணைக்கப்பட்ட களஞ்சியங்களுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்க இறக்குமதித் தீர்வை விலக்கு. |
| | ஏற்றுமதி செயலாக்கத்திற்கான தற்காலிக இறக்குமதி (TIEP) திட்டத்தின் கீழ், ஏற்றுமதிக்கான பொருட்களை பதப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் இறக்குமதிக்கு சுங்க இறக்குமதித் தீர்வை மற்றும் பிற நிதி வரிகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது, INFAC திட்டம். |
| சுங்க இறக்குமதித் தீர்வை, உற்பத்தித் தீர்வை | 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சர்வதேச ஒப்பந்தத்திற்கு இணங்க, இராஜதந்திர மற்றும் சர்வதேச அமைப்புகளால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்க இறக்குமதித் தீர்வை மற்றும் உற்பத்தித் தீர்வை விலக்கு அளித்தல். |
| உற்பத்தித் தீர்வை | சிகாகோ மாநாட்டின் கீழ் வரும் விமான எரிபொருளுக்கான உற்பத்தித் தீர்வை விலக்கு, கட்டமைப்பு நிவாரணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. |

### 1.6 வரிச் செலவின மதிப்பீடு

வரிச் செலவினத்தை மதிப்பிடுவதற்கு சர்வதேச அளவில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மூன்று முக்கிய அணுகுமுறைகள் உள்ளன:

i. **வருமான இழப்பு அணுகுமுறை (நிலையான மதிப்பீடு)** – வரி செலுத்துவோரின் நடத்தை மாறாமல் இருக்கும் என்று கருதி, தொடர்புடைய வரிச் சலுகை அல்லது பலன் இல்லாத நிலையில் அரசாங்கம் வசூலித்திருக்கக்கூடிய வருமானத்தின் அளவை இது மதிப்பிடுகிறது.

ii. **வருவாய் ஆதாய அணுகுமுறை (மாறும் மதிப்பீடு)** – கொள்கை மாற்றத்தின் விளைவாக வரி செலுத்துவோரின் நடத்தை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு வரிச் செலவினத்தை திரும்பப் பெறுவதன் மூலமோ அல்லது மாற்றுவதன் மூலமோ உருவாக்கப்படக்கூடிய மேலதிக வருவாயை இது மதிப்பிடுகிறது.

iii. **செலவினத்திற்கு நிகரான அணுகுமுறை** – தொடர்புடைய வரிச் செலவினத்தின் மூலம் வழங்கப்படும் நிதி அனுகூலத்திற்கு நிகரான ஒரு நிதி அனுகூலத்தினை வரி செலுத்துவோருக்கு வழங்குவதற்குத் தேவைப்படும் நேரடி அரசாங்கச் செலவினத்தின் அளவை இது மதிப்பிடுகிறது.

இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள மதிப்பீடுகள், வருமான இழப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறையின் கீழ், வரி செலுத்துவோரின் நடத்தை மற்றும் பிற தொடர்புடைய பொருளாதார நிலைமைகள் மாறாமல் இருக்கும் என்று கருதி, தொடர்புடைய வரிச் செலவின ஏற்பாடு நடைமுறையில் இல்லாதிருந்தால் அரசாங்கம் திரட்டக்கூடிய வரி வருவாயின் அளவாக வரிச் செலவினம் மதிப்பிடப்படுகிறது.

ஒரு வரிச் செலவினத்தை நீக்குதல் அல்லது மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்குப் பிறகு வரி செலுத்துவோரின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களால் எந்தவிதமான இயங்கு விளைவுகளும் ஏற்படாது என்று இந்த மதிப்பீடு கருதுகிறது. மேலும், வரி செலுத்துவோரின் இணக்க நடத்தை மாறாமல் இருக்கும் என்றும், தனிப்பட்ட வரிச் செலவின அளவீடுகளுக்கு இடையேயான எந்தவொரு தொடர்பு களும் அல்லது ஒன்றையொன்று சார்ந்திருத்தல்களும் புறக்கணிக்கத்தக்கவை என்றும் கருதப்படுகிறது.

“வருமான இழப்பு அணுகுமுறை“ நடத்தை சார்ந்த பதில்கள், பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது பிற இயங்கு விளைவுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாததால், ஒரு வரிச் செலவினத்தை நீக்குவதன் மூலம் உண்மையில் கிடைக்கக்கூடிய சாத்தியமான வருவாயை மிகைப் படுத்திக் காட்டக்கூடும் என்றாலும், அது வரிச் செலவினங்களை மதிப்பிடுவதற்கும் அறிக்கையிடுவ தற்கும் ஒப்பீட்டளவில் நேரடியான, வெளிப்படையான மற்றும் சீரான ஒரு அடிப்படையை வழங்குகிறது. அதன்படி, இந்த அணுகுமுறை வரிச் செலவினங்களின் ஆரம்ப அளவீடு மற்றும் அறிக்கையிடலுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

### 1.7 நவம்பர் 2025 இல் வெளியிடப்பட்ட முந்தைய வெளியீட்டிற்குப் பிறகு வரிச் செலவின அறிக்கை யில் செய்யப்பட்ட மாற்றங்கள்

இலங்கையின் வரிச் செலவின அறிக்கை கட்டமைப் பின் துல்லியம், நிலைத்தன்மை, ஒப்பிடக்கூடிய தன்மை மற்றும் கொள்கைப் பொருத்தப்பாட்டை மேம்படுத்து வதை நோக்கமாகக் கொண்ட பல வழிமுறை மற்றும் நோக்க மேம்பாடுகளை இந்த வரிச் செலவின அறிக்கையின் பதிப்பு அறிமுகப்படுத்துகின்றது. இந்தப் பதிப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய மாற்றங்கள் கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன:

• மதிப்பீடுகளை ஆரம்பித்தல்:

முக்கிய வரிச் செலவினங்களின் செலவு-அனுகூலம் மற்றும் செலவு-செயல்திறன் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக ஒரு பல்லாண்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் விஷேட அபிவிருத்தித் திட்டங்களின் (SDPs) முன்-செலவு-அனுகூலம பகுப்பாய்வு, துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவால் கொழும்புத் துறைமுக நகர ஊக்கத்தொகைகளின் தொழில்நுட்ப மற்றும் முன் பின்-பகுப்பாய்வு, மற்றும் BOI ஊக்கத்தொகைகளின் முன்-பின்-மதிப்பீடு ஆகியவை அடங்கும்.

• ஆண்டுக்கு ஆண்டு ஒப்பீடு:

காலப்போக்கில் வரிச் சலுகைகளின் நிதிச் செலவில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிடுவதற்கும், வரி வகை மற்றும் முக்கிய வரிச் செலவினப் பிரிவு வாரியாக குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் அல்லது குறைப்பு களைக் கண்டறிவதற்கும் வசதியாக, வரிச் செலவின மதிப்பீடுகளின் ஆண்டுக்கு ஆண்டு ஒப்பீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

• சர்வதேச ஒப்பீடு:

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுடன் இலங்கையின் வரிச் செலவினக் கட்டமைப்பை அளவுகோலாகக் கொள்ளவும், அளவீடு, மதிப்பீடு, வெளிப்படைத்தன்மை மற்றும் அறிக்கையிடலில் மேலும் மேம்படுத்த வேண்டிய பகுதிகளைக் கண்டறியவும், வரிச் செலவின மதிப்பீடுகள் மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகளின் சர்வதேச ஒப்பீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

• வரிச் சலுகை காலாவதி ஆய்வு:

2025 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தி கருத்திட்டம் (திருத்தச்) சட்டம் மற்றும் 2026 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைய (திருத்தச்) சட்டம் என்பவை வரி மேலதிகக் கொடுப்பனவை வழங்குவதற்காக குறிப்பிட்ட கால வரம்புகளை வழங்கு கின்றமையால் வரி கொடுப்பனவு சட்டமானது வலுவடைகிறது.

• கொள்கை நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட வரிச் செலவின வகைப்பாடு:

வரிச் செலவின நடவடிக்கைகள், அவற்றின் அடிப்படைக் கொள்கை நோக்கங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட விளைவுகளுக்கு அதிக முக்கியத் துவம் அளித்து வழங்கப்படுகின்றன. இதன் மூலம், அவற்றின் நியாயம் மற்றும் அரசாங்கக் கொள்கை முன்னுரிமைகளுடனான பொருத்தம் ஆகியவற்றைத் தெளிவாக மதிப்பிட வழிவகை செய்யப்படுகிறது.

**• மேம்படுத்தப்பட்ட வரிச் செலவினச் சொற்களஞ்சியம்:**

வரிச் செலவின அறிக்கையிடலின் தெளிவு, நிலைத்தன்மை மற்றும் ஒப்பிடக்கூடிய தன்மையை மேம்படுத்துவதற்காக, வரிச் செலவினம் தொடர்பான முக்கியச் சொற்கள் தரப்படுத்தப்பட்டுத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

### 1.8 வரையறைகள் மற்றும் தரவுப் பரிசீலனைகள்

• ஏனைய நிலைமைகள் மாறாதிருக்கும் என்ற அனுமானம்

ஏனைய அனைத்து நிலைமைகளும் மாறாதிருக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் வரிச் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. வரி வரு-மானத்தைப் பாதிக்கக்கூடிய வரி செலுத்துவோரின் நடத்தை, பொருளாதார நிலைமைகள் அல்லது ஏனைய காரணிகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் இம்மதிப்பீடுகளில் கருத்திற்கொள்ளப்படுவதில்லை

• கருத்திட்டம்-சார்ந்த ஊக்குவிப்புத்தொகை: BOI கருத் திட்டங்கள், மூலோபாய அபிவிருத்திக் கருத் திட்டங்கள், மற்றும் கொழும்புத் துறைமுக நகரக் கருத் திட்டங்கள் உள்ளிட்ட முக்கிய முதலீட்டுத் கருத்திட்டங்களுக்கான உண்மையான நிதிச் செல வானது, முதலீட்டு அர்ப்பணிப்புகளின் செயலாக்கம் மற்றும் வேலைவாய்ப்பு அடைவு, உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் பிற கருத்திட்ட விளைவுகளை அடைவதைப் பொறுத்து அமையலாம். எனவே, முன் மதிப்பீடுகள், பின்னர் உணரப்படும் வரிச் செலவினங்களிலிருந்து வேறுபடலாம்.

• வரையறுக்கப்பட்ட பங்கீட்டுப் பகுப்பாய்வு - தற்போதைய வரிச் செலவின அறிக்கையானது வருமானக் குழுக்கள், துறைகள், நிறுவன அளவுகள், பிராந்தியங்கள் மற்றும் வரி செலுத்துவோர் பிரிவுகள் முழுவதும் வரிச் செலவினங்களின் பங்கீட்டுத் தாக்கம் தொடர்பான வரையறுக்கப்பட்ட பகுப்பாய்வை வழங்கு கிறது, இதன்மூலம் அத்தகைய வரிச் செலவினங் களின் சமத்துவம், இலக்கு நிர்ணயம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் மதிப்பீட்டைக் கட்டுப் படுத்துகிறது.

• வழங்கல் மற்றும் பயன்பாட்டு அட்டவணைகளும் வகை வாரியான விரிவான நுகர்வுத் தரவுகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைத்தல்

பெறுமதி சேர் வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு மதிப்பீடுகள், பதிவுசெய்யப்பட்ட வரி செலுத்துவோரால் தாக்கல் செய்யப்பட்ட வரி அறிக்கைகளின் அடிப்படையில் மட்டுமே கணக் கிடப்படுகின்றன. இது ஒரு பெரிய வரம்பாக விளங்குகிறது, ஏனெனில் இது நாட்டின் உண்மையான அல்லது சாத்தியமான பொருளாதார வழங்கலின் உண்மையான அளவைக் கணக்கிடத் தவறுகிறது. இழக்கப்பட்ட வருமானத்தின் சரியான தொகையைக் கணக்கிடுவதற்கு, இந்த வரி செலுத்துவோரால் அறிவிக்கப்பட்ட வருமானத்தை மொத்த தேசிய வழங்கல் தரவுகளுடன் நாம் ஒப்பிட வேண்டும். இருப்பினும், இந்த ஒப்பீட்டிற்குத் தேவையான விரிவான வழங்கல் மற்றும் பயன்பாட்டு அட்டவணைகள் (SUTs) மற்றும் விரிவான நுகர்வுப் பிரிவுகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. மொத்த சாத்தியமான பொரு ளாதார வழங்கலுக்கும் முறையாக அறிவிக்கப் பட்டதற்கும் இடையிலான இடைவெளியை நம்மால் அளவிட முடியாததால், இந்த பெறுமதி சேர் வரி (VAT) செலவினப் புள்ளிவிவரங்கள், இழக்கப்பட்ட வருவாயின் முழுமையான மொத்தமாகக் கருதப் படுவதற்கு அப்பால் ஒரு பாதுகாப்பான குறைந்த பட்ச அளவாகவே கருதப்பட வேண்டும்.

**அட்டவணை 1.7 - இலங்கை வரிச் செலவிடல் அறிக்கையிடல் சர்வதேச சிறந்த நடைமுறைகளின் ஒப்பீட்டாய்வு**

| பரப்பு | இலங்கை | சர்வதேச நடைமுறை |
|---|---|---|
| பயனாளர் பகுப்பாய்வு | வரிச் செலவினங்களின் பயனாளிகள் தொடர்பான தகவல்கள் வரையறுக்கப் பட்டவை | **இந்தோனேசியா** பயனாளித் துறைகள் மற்றும் வரி செலுத்துவோர் பிரிவுகளின்படி வரிச் செலவினங்களை வழங்குகிறது. |
| பங்கீட்டுப் பகுப்பாய்வு | பகிர்வுத் தாக்கங்கள் முறையாக முன்வைக்கப்படவில்லை. | **அவுஸ்திரேலியா** பல்வேறு வருமானக் குழுக் களில் ஏற்படும் தாக்கங்கள் உட்பட, முக்கிய வரிச் செலவினங்களின் பங்கீட்டுப் பகுப் பாய்வை வழங்குகிறது. |
| கொள்கை நோக்கங்கள் | வரிச் செலவினங்களுக்கான நியாயம் பொதுவாக அடையாளம் காணப் பட்டாலும், கொள்கை நோக்கங்களுட னான மதிப்பீடு குறைவாகவே உள்ளது. | **இந்துனேசியா** முதலீடு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட குறிப்பிட்ட கொள்கை நோக்கங்களுடன் வரிச் செலவின நடவடிக்கைகளை இணைக்கிறது. |
| செலவு - வினைத்திறன் மதிப்பீடு | முறையான செலவு - பயன் மற்றும் செயல்திறன் மதிப்பீடுகள் குறை வாகவே உள்ளன. | **கனடா** தேர்ந்தெடுக்கப்பட்ட வரி நடவடிக்கை களின் செயல்திறன் மற்றும் கொள்கைத் தாக்கங்களை மதிப்பிடுவதற்காக அவற்றின் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. |
| பல்லாண்டுப் பகுப்பாய்வு | இந்தப் பகுப்பாய்வு முதன்மையாக தற்போதைய அறிக்கைக் காலத்தை மையமாகக் கொண்டுள்ளது. | **கனடா** வரிச் செலவினங்களின் வரலாற்று மதிப்பீடுகளையும் எதிர்காலக் கணிப்புகளையும் வழங்குகிறது. |
| முன்கணிப்பு மற்றும் உண்மையான செலவு ஒப்பீடு | முறையான ஒப்பீடு குறைவாகவே உள்ளது. | **ஐக்கிய இராச்சியம்,** முன்கணிக்கப்பட்ட வரி நிவாரணச் செலவுகளை மதிப்பிடப்பட்ட இறுதிச் செலவுகளுடன் ஒப்பிட்டு, குறிப்பிடத் தக்க வேறுபாடுகளைப் பகுப்பாய்வு செய்கிறது. |
| நேரடிச் செலவினத்துடனான ஒப்பீடு | வரிச் செலவினங்களுக்கும் நேரடி அரசாங்கச் செலவினங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறை வாகவே உள்ளன. | **கனடா** வரி நடவடிக்கைகளை மதிப்பிடும்போது தொடர்புடைய அரசாங்கச் செலவினத் திட்டங்களைக் கருத்தில் கொள்கிறது. |

- *வரிச் செலவின அறிக்கை 2024 – இந்தோனேசியா*
- *வரிச் செலவினம் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை 2026 – அவுஸ்திரேலியா*
- *கூட்டாட்சி வரிச் செலவினங்கள் பற்றிய அறிக்கை – கருத்தாக்கங்கள், மதிப்பீடுகள் மற்றும் மதிப்பாய்வுகள் 2026 – கனடா*
- *அரச வருமான மற்றும் சுங்கத் திணைக்களம் (2026), வரி நிவாரணப் புள்ளிவிபரங்கள், சனவரி 2026 – ஐக்கிய இராச்சியம்*

### 1.9 முன்னோக்கிச் செல்லும் வழி மற்றும் சீர்திருத்தம்

இந்த வரிச் செலவின அறிக்கையின் வெளியீடானது, இலங்கையின் பகிரங்க நிதி முகாமைத்துவ கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான முதல் படியாகும். நிதி அமைச்சானது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து, வரிச் செலவின அறிக்கையிடலின் தரம், வெளிப்படைத் தன்மை மற்றும் முழுமையான தன்மையை மேலும் மேம்படுத்துவதில் உறுதியாக உள்ளது.

- பல்லாண்டு வரிச் செலவினப் பகுப்பாய்வை உருவாக்குதல்: நிதிச் செலவுகளில் உள்ள போக்குகளைக் கண்டறிவதற்கும், அத்தகைய வரிச் செலவினங்களின் நிலைத்தன்மையை மதிப்பிடுவதற்கும், பல ஆண்டுகளாக முக்கிய வரிச் செலவினங்களைக் கண்காணித்தல்.
- பங்கீட்டுப் பகுப்பாய்வை அறிமுகப்படுத்துதல்: அத்தகைய வரிச் செலவினங்களின் சமத்துவம் மற்றும் இலக்கு நிர்ணயத்தை மதிப்பீடு செய்வதற்காக, வருமானக் குழு, துறை, நிறுவனத்தின் அளவு, பிராந்தியம் மற்றும் வரி செலுத்துவோர் வகை ஆகியவற்றின் அடிப் படையில் பிரதான வரிச் செலவினங்களால் கிடைக்கும் நன்மைகளை மதிப்பிடல்,
- பயனாளர் தகவல்களின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்: பொருந்தக் கூடிய இரகசியத்தன்மை தேவைகளுக்கு உட்பட்டு, பயனாளர்கள் குறித்த திரட்டப்பட்ட தகவல்களையும், முக்கிய வரிச் சலுகைகளின் நிதிச் செலவையும் வெளிப்படுத்துவதை மேம்படுத்துதல்.

# பகுதி II

## வரிச் செலவின மதிப்பீடுகள்

## அத்தியாயம் 2 – வரி வகையின் அடிப்படையில் வரிச் செலவினம் பற்றிய நோக்கும் பகுப்பாய்வும்

இந்த அத்தியாயமானது பெருநிறுவன வருமான வரி (CIT), தனியாள் வருமான வரி (PIT), பெறுமதி சேர் வரி (VAT), சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடு (SSCL), உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (XID), மற்றும் சுங்க இறக்குமதித் தீர்வை (CID) ஆகியவற்றின் கீழ் வரிச் செலவினங்களின் கீழ் ஒரு திரட்டிய தொகுப்பினையும் பகுப்பாய்வினையும் வழங்குகின்றது. இது ஒவ்வொரு வரி வகையின் கீழான முதன்மை நிவாரண நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அவற்றின் அரசிறை முக்கியத்துவத் தினையும் ஆக்கக்கூறினையும் பரிசீலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டுக்கான மற்றும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான வரிச் செலவின மதிப்பீடுகளை அட்டவணை 2.1 சமர்ப்பிக்கின்றது. CIT மற்றும் PIT ஆகியன மதிப்பீட்டு வருடத்தின் போது அறிக்கையிடப்படும் அதேவேளை, ஏனைய வரிகள் 2025 முழு வருடத்திற்காகவும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்காகவும் வெவ்வேறாக அறிக்கையிடப்படுகின்றன. பெறுமதி சேர் வரி மற்றும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடு என்பவற்றின் 2025 மொத்தங்கள், 2024/2025 ஆம் ஆண்டுகளுக் காக வெளியிடப்பட்ட முன்னைய TES இல் இருந்து உள்ளீடுகளைப் பெற்று, TES 2025/2026 ஆனது 2025 ஆம் ஆண்டுக்கான மற்றும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான வரிச் செலவின மதிப்பீடு களின் ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்வினை வழங்குகின்றது. இந்தப் பகுப்பாய்வானது வெவ்வேறு வரிச் சாதனங்களின் மத்தியிலான வரிச் செலவினங்களின் அளவிலும் ஆக்கவமைவிலும் உள்ள மாற்றங்களைக் கோடிட்டுக்காட்டி, காலப்போக்கில் அவற்றின் மாற்றங் களைக் கண்காணிப்பதற்கான ஓர் அடிப்படையினை வழங்குகின்றது. இந்தக் கண்டறிதல்கள் வரி நிவாரண நடவடிக்கைகளின் செயற்திறன் மற்றும் அரசிறை நிலையுறுதித்தன்மை என்பவற்றின் தொடர்ச்சியான மதிப்பீட்டிற்குத் துணை நின்று, வருமானத் திரட்டு மற்றும் செலவினங்களை சீரமைத்தல் தொடர்பான எதிர்காலக் கொள்கைத் தீர்மானங்களுக்கு உள்ளீடு களை வழங்குகின்றது.


### அட்டவணை 2.1 : வரிவகையின் அடிப்படையில் வரிச் செலவினம்

*ரூபா மில்லியன்*


| வரிச் செலவின வகை | வரிச் செலவினம் | | | |
|---|---|---|---|---|
| | 2023/24 | | 2024/25 | |
| நிறுவன வருமான வரி | | 119,290 | | 186,069 |
| தனி நபர் வருமான வரி | | 10,461 | | 36,278 |
| | வரிச் செலவினம் | | | |
| மறைமுக வரி | 2023 | 2024 | 2025 | 2026 முதல் பாதி |
| பெறுமதி சேர் வரி | - | 333,295 | 419,251 | 242,954 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | - | - | 216,283 | 135,270 |
| உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) | - | 9,967 | 16,254 | 9,023 |
| சுங்க இறக்குமதி தீர்வை | - | 138,426 | 144,473 | 74,247 |
| மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி | 480 | 1,800 | - | - |

*குறிப்பு: இம்மதிப்பீடுகள் வெவ்வேறு வரிக் காலப்பகுதிகளுக்கும் மதிப்பீட்டு அடிப்படைகளுக்கும் உரியவையாக இருக்கலாம். எனவே, அவற்றைப் பொருள்கொள்ளும்போது தொடர்புடைய அறிக்கையிடல் காலப்பகுதியையும் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறையியலையும் கருத்திற்கொள்ள வேண்டும்.*

**வரைபு 2.1 : குறிப்பிட்ட காலப்பகுதிற்கான வரி செலவினத்தின் சுருக்கம்**




*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*




*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச்சுங்கம்*

## 2.1 நிறுவன வருமான வரி (CIT)

2023/24 மதிப்பீட்டு வருடத்தின் போது 119,290 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பெருநிறுவன வருமான வரி மீதான மதிப்பிடப்பட்ட வரிச் செலவினமானது 2024/25 மதிப்பீட்டு வருடத்தின் போது 56.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 186,069 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த அதிகரிப் பானது முதலீட்டுச் சபை சாராத தொழில்முயற்சி களுக்கும் முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களுக்கும் வழங்கப்பட்ட ஆகக் கூடிய சலுகைகளுடனும் விலக்குகளுடனும் தொடர்புறுத்தப் படக் கூடியதாகும்.

துறைமுக நகரக் கருத்திட்டங்கள் நீங்கலாக, முதலீட்டுச் சபை சாராத தொழில்முயற்சிகளுக்கு ஏற்புடையதான சலுகை ரீதியான வரி வீதங்களில் இருந்து எழுகின்ற வரிச் செலவினமானது 2024/25 ஆண்டுகளின் போது 106,904 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை இவ்வாறான தொழல்முயற்சி களுக்கு வழங்கப்பட்ட விலக்குகளால் ஏற்ட்ட செலவினம் 14,594 மில்லியன் ரூபாவாக் காணப் பட்டது. முதலீட்டுச் சபை வகையினுள், உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான (SDPs) சலுகை வரி வீதங்களில் இருந்து எழுகின்ற வரிச் செலவின மானது 84 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவே-ளை, SDP சாராத தொழில்முயற்சிகளுக்கு வழங்கப் பட்ட விலக்குகளில் இருந்து எழுகின்ற செலவின மானது 52,967 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட வியாபாரங்கள் செயற்பாட்டினை ஆரம்பித்து சம்பந்தப்பட்ட சட்டவாக்கக் கட்டமைப்புக் களின் கீழ் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களுக்குத் தகைமையுடையவையாக மாறுகின்ற காரணத்தினால் துறைமுக நகரக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய வரிச் செலவினம் இடைக் காலத்தின் போது அதி-கரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அட்டவணை 2.2 : நிறுவன வருமான வரிச் செலவினம்**

*ரூபா மில்லியன்*

| வகை | | செலவின வகை | வரிச் செலவினம் | |
|---|---|---|---|---|
| | | | 2023/24 | 2024/25(அ) |
| முதலீட்டுச் சபை | செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் | சலுகை விகிதம் | - | 84 |
| | | விலக்கு அளிக்கப்பட்டவை | 123 | - |
| | செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் தவிர்ந்த | சலுகை விகிதம் | 41,682 | 11,520 |
| | | விலக்கு அளிக்கப்பட்டவை | - | 52,967 |
| முதலீட்டுச்சபை அல்லாத துறைமுக நகரம் தவிர்ந்த | | சலுகை விகிதம் | 72,740 | 106,904 |
| | | விலக்கு அளிக்கப்பட்டவை | 4,602 | 14,594 |
| துறைமுக நகர செயற்றிட்டம் | | சலுகை விகிதம் | - | - |
| | | விலக்கு அளிக்கப்பட்டவை | 143 | - |
| **மொத்தம்** | | | **119,290** | **186,069** |

*மூலம்: உள்நாட்டு இறைவரித்திணைக்களம், இலங்கை முதலீட்டுச் சபை*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

## 2.2 தனியாள் வருமான வரி (PIT)

2023/24 மதிப்பீட்டு ஆண்டுகளின் போது 10,461 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட தனியாள் வருமான வரி மீதான மதிப்பிடப்பட்ட வரிச் செலவினமானது 2024/25 மதிப்பீட்டு ஆண்டுகளின் போது 246.8 சதவிகிதத்தினால் அதிகரித்து 36,278 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

இந்த 25,817 மில்லியன் ரூபா அதிகரிப்பானது, விலக்களிக்கப்பட்ட மற்றும் உள்ளடக்கப்படாது நீக்கப் பட்ட வருமானத்தில் பிரதானமாகப் பிரதி பலித்ததுடன் இது 2024/25 ஆண்டின் போது PIT மீதான மதிப் பிடப்பட்ட வரிச் செலவினத்தின் மிகப் பெரிய கூறாகக் காணப்பட்டு 32,354 மில்லியன் ரூபாவாகவும் மொத்தத்தின் 89.2 சதவிகிதமாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 2.3 :தனிநபர் வருமான வரிச் செலவினம்**


*ரூபா மில்லியன்*

| செலவின வகை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2023/24 | 2024/25(அ) |
| நிவாரணம் மற்றும் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகள் | 8,191 | 3,924 |
| விலக்களிக்கப்பட்டவை | 2,270 | 32,354 |
| **மொத்தம்** | **10,461** | **36,278** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**வரைபு 2.2: தனிநபர் வருமான வரிச் செலவு 2024/25(அ)**




*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

## 2.3 பெறுமதி சேர் வரி (VAT)

2024 ஆம் ஆண்டின் போது 333,295 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பெறுமதி சேர் வரி மீதான மதிப்பிடப்பட்ட வரிச் செலவினமாது 2025 ஆம் ஆண்டின் போது 25.8 சதவிகிதத்தினால் அதிகரித்து 419,251 மில்லியன் ரூபாவாக அதிகரித்து 85956 மில்லியன் ரூபா அதிகரிப்பைக் காட்டுகிறது. 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது, பெறுமதி சேர் வரி தொடர்பான மதிப்பிடப்பட்ட வரிச் செலவினமானது 207,359 மில்லியன் ரூபாவில் இருந்து 17.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 242,954 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் பெறுமதி சேர் வரிச்செலவீட்டின் முக்கிய ஆதாரமாக முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்ந்தும் காணப்பட்டன. 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் இந்நிறுவனங்கள் 223,933 மில்லியன் வரிச் செலவீட்டிற்கு பொறுப்பாக இருந்தன. இதே காலப்பகுதியில் முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் மூலோபாய அபிவிருத்தித் திட்டங்களுக் குரிய வரிச் செலவீடுகள் முறையே ரூ. 18,894 மில்லியன் மற்றும் ரூ. 127 மில்லியனாக இருந்தன. இப்பிரிவுகளின் மொத்தப் பெறுமதி சேர் வரிச் செலவீடு ரூ. 242,954 மில்லியனாகும்.

முதலீட்டுச் சபை சாராத இந்த வகையினுள், மொத்த விற்பனைத் துறையும் சில்லறை விற்பனைத் துறையும் 2025 ஆம் ஆண்டிலும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரை யாண்டிலும் உயர் பெறுமதி சேர் வரிச் செலவினத்தினைப் பதிவுசெய்திருந்தன.

புதிய பெறுமதிசேர் வரிச் செலவினங்களை வெளியிடுதல்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புதிய பாலைப் பயன்படுத்தி விநியோகிக்கப்படும் திரவ பால் மற்றும் யோகட்களுக்கான பெறுமதிசேர் வரி 2025 ஏப்ரல் மாதம் 11 ஆந் திகதி முதல் விலக்களிக்கப்பட்டது.

**அட்டவணை 2.4 :பெறுமதி சேர்வரிச் செலவினத்திற்கான சுருக்கம்**

*ரூபா மில்லியன்*

| செலவின வகை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| முதலீட்டுச்சபை நிறுவனங்கள் | 28,133 | 18,894 |
| முதலீட்டுச் சபை அல்லாத செயல்நுணக்க அபிவித்தி கருத்திட்டம் மற்றும் துறைமுக நகரம் தவிர்ந்த | 390,832 | 223,933 |
| செயல்நுணுக்க அபிவித்தி கருத்திட்டம் | 286 | 127 |
| **மொத்தம்** | **419,251** | **242,954** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.5 : முதலீட்டுச் சபை நிறுவனங்களுக்கான துறை ரீதியான பெறுமதி சேர்வரிச் செலவினம்**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| உற்பத்தி - விவசாயம் | 41 | 27 |
| உற்பத்தி - மதுசாரமற்ற | 5 | 1 |
| உற்பத்தி - மற்றவை | 15,704 | 8,723 |
| உற்பத்தி - புடவை மற்றும் ஆடைகள் | 621 | 528 |
| சேவை - கட்டுமானம் | 19 | 11 |
| சேவை - மின்சாரம் மற்றும் எரிபொருள் | 349 | 226 |
| சேவை - மற்றவை | 1,560 | 1,105 |
| சேவை - தொலைத் தொடர்பு | 236 | 110 |
| சேவை - சுற்றுலா | 152 | 69 |
| சேவை - போக்குவரத்து | 0.1 | 0.2 |
| சேவை - மொத்த மற்றும் சில்லறை | 9,277 | 7,985 |
| மற்றவை | 168 | 108 |
| **மொத்தம்** | **28,133** | **18,894** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.6 : செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் துறைமுக நகரத் திட்டங்களைத் தவிர்த்து, முதலீட்டுச்சபை அல்லாத நிறுவனங்களுக்கான துறை வாரியான பெறுமதி சேர் வரி செலவுகள்**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| உற்பத்தி - விவசாயம் | 5,183 | 3,124 |
| உற்பத்தி - மதுசாரமற்ற | 106 | 72 |
| உற்பத்தி - மற்றவை | 46,920 | 27,281 |
| உற்பத்தி - புடவை மற்றும் ஆடைகள் | 2,418 | 1,271 |
| சேவை - கட்டுமானம் | 38,087 | 8,207 |
| சேவை - மின்சாரம் மற்றும் எரிபொருள் | 65,293 | 36,404 |
| சேவை - மற்றவை | 21,775 | 11,653 |
| சேவை - தொலைத் தொடர்பு | 71 | 41 |
| சேவை - சுற்றுலா | 1,225 | 811 |
| சேவை - போக்குவரத்து | 3,948 | 2,006 |
| சேவை - நீர் | 137 | 104 |
| சேவை - மொத்த மற்றும் சில்லறை | 188,130 | 113,397 |
| மற்றவை | 17,539 | 19,563 |
| **மொத்தம்** | **390,832** | **223,933** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.7 : செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான துறை ரீதியான பெறுமதி சேர் வரிச்செலவினம்**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| உற்பத்தி - புடவை மற்றும் ஆடைகள் | - | 11 |
| சேவை - கட்டுமானம் | - | 0.1 |
| சேவை - சுற்றுலா | 284 | 115 |
| சேவை - போக்குவரத்து | 2 | 1 |
| **மொத்தம்** | **286** | **127** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை மற்றும் 2025 இல் அடையாளம் காணப்பட்ட திருத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

## 2.4 சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடு (SSCL)

சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடு மீதான மதிப்பிடப்பட்ட வரிச் செலவினம் 2025 ஆம் ஆண்டிலும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போதும் முறையே 216,283 மில்லியன் ரூபாவாகவும் 135,270 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது SDP மற்றும் துறைமுக நகரக் கருத்திட்டங்கள் நீங்கலான முதலீட்டுச் சபை சாராத கம்பனிகளுக்கான வரிச் செலவினமானது 125,082 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இது மொத்தத் தொகையில் பரிய பங்கினைக் கொண்டிருந்தது. முதலீட்டுச் சபைக் கம்பனிகள், செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள், துறைமுக நகர கருத்திட்டங்கள் என்பவற்றுக்கான வரிச் செலவினமானது முறையே 10,120 மில்லியன் ரூபாவாகவும் 55 மில்லியன் ரூபாவாகவும் 13 மில்லியன் ரூபாவாகவும் காணப் பட்டது. முதலீட்டுச் சபை சாராத வகையினுள், மொத்த விற்பனைத் துறையும் சில்லறை விற்பனைத் துறையும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் உயர் SSCL செலவினத்தினைப் பதிவுசெய்திருந் ததுடன் இதற்கடுத் ததாக ஏனைய உற்பத்திச் செயற்பாடுகள், துணிகள் மற்றும் ஆடைகள் மற்றும் போக்குவரத்து காணப் பட்டன. முதலீட்டுச் சபை வகையினுள், மொத்த விற்பனைத் துறையும் சில்லறை விற்பனைத் துறையும் உயர் வரிச் செலவினத்தினைப் பதிவுசெய்ததுடன் இதற்கடுத்ததாக துணிகள் மற்றும் ஆடைகள் துறையும் ஏனைய உற்பத்திச் செயற்பாடு களும் காணப்படுகின்றன. சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடுகளுக்கான வரிச் செலவினத்தின் மிகப் பெரிய பங்கினைப் போக்குவரத்துக் கொண்டிருந்தது.

**அட்டவணை 2.8 : சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சுருக்கம்**

*ரூபா மில்லியன்*

| வரிச் செலவினம் | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| முதலீட்டுச்சபை நிறுவனங்கள் | 15,759 | 10,120 |
| முதலீட்டுச் சபை அல்லாத செயல்நுணுக்க அபிவித்தி கருத்திட்டம் மற்றும் துறைமுக நகரம் தவிர்ந்த | 200,420 | 125,082 |
| செயல்நுணுக்க அபிவித்தி கருத்திட்டம் | 93 | 55 |
| துறைமுக நகரம் | 11 | 13 |
| **மொத்தம்** | **216,283** | **135,270** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.9 : முதலீட்டு சபை நிறுவனங்களுக்கான சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு செலவு மதிப்பீடுகள் துறை ரீதியாக**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| உற்பத்தி - விவசாயம் | 95 | 47 |
| உற்பத்தி - மதுசாரமற்ற | 1 | 0.4 |
| உற்பத்தி - மற்றவை | 3,623 | 1,870 |
| உற்பத்தி - புடவை மற்றும் ஆடைகள் | 5,897 | 2,593 |
| சேவை - கட்டுமானம் | 0.3 | - |
| சேவை - மின்சாரம் மற்றும் எரிபொருள் | 26 | 121 |
| சேவை - மற்றவை | 1,364 | 670 |
| சேவை - தொலைத் தொடர்பு | 125 | 41 |
| சேவை - சுற்றுலா | 232 | 135 |
| சேவை - போக்குவரத்து | 8 | 5 |
| சேவை - மொத்த மற்றும் சில்லறை | 3,919 | 4,435 |
| மற்றவை | 470 | 202 |
| **மொத்தம்** | **15,759** | **10,120** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழி மற்றும் 2025 இல் கண்டறியப்பட்ட திருத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.10 : செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டங்களைத் தவிர்த்து, முதலீட்டுச்சபை அல்லாத நறுவனங் களுக்கான துறை ரீதியான சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச்செலவினம்**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| உற்பத்தி - விவசாயம் | 966 | 446 |
| உற்பத்தி - மதுசாரமற்ற | 33 | 21 |
| உற்பத்தி - மற்றவை | 19,945 | 8,980 |
| உற்பத்தி - புடவை மற்றும் ஆடைகள் | 15,991 | 8,041 |
| சேவை - வங்கி, காப்புறுதி மற்றும் குத்தகை | 3,104 | 2,775 |
| சேவை - கட்டுமானம் | 6,610 | 1,508 |
| சேவை - மின்சாரம் மற்றும் எரிபொருள் | 110 | 48 |
| சேவை - மற்றவை | 66,935 | 2,246 |
| சேவை - தொலைத் தொடர்பு | 116 | 58 |
| சேவை - சுற்றுலா | 1,867 | 1,207 |
| சேவை - போக்குவரத்து | 13,768 | 7,679 |
| சேவை - நீர் | 2,103 | 1,104 |
| சேவை - மொத்த மற்றும் சில்லறை | 54,234 | 41,131 |
| மற்றவை | 14,638 | 49,840 |
| **மொத்தம்** | **200,420** | **125,082** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழி மற்றும் 2025 இல் கண்டறியப்பட்ட திருத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.11 : செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு செலவு மதிப்பீடுகள் துறை ரீதியாக**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| தயாரிப்பு - ஏனையவை | 0.04 | 0.01 |
| சேவை - கட்டுமானம் | 20 | 11 |
| சேவை - சுற்றுலா | 8 | 11 |
| சேவை - போக்குவரத்து | 65 | 33 |
| **மொத்தம்** | **93** | **55** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழி மற்றும் 2025 இல் கண்டறியப்பட்ட திருத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 2.12 : கொழும்பு துறைமுக நகர துறைக்காக அண்ணளவாக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டு செலவினம்**

*ரூபா மில்லியன்*

| துறை | வரிச் செலவினம் | |
|---|---|---|
| | 2025(அ) | 2026 முதல் அரை(அ) |
| சேவைகள் - ஏனைய | 11 | 13 |
| **மொத்தம்** | **11** | **13** |

*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

*குறிப்பு: வரி செலுத்துவோர் உறுதிமொழி மற்றும் 2025 இல் கண்டறியப்பட்ட திருத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.*
*(அ) தற்காலிகமானது*

## 2.5 உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்)

உள்நாட்டில் பொருத்தித் தயாரிக்கப்படும் வாகனங் களுக்கு வழங்கப்படும் விலக்கு 2025 ஆம் ஆண்டில் 16,156 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் மொத்த விலக்குகளில் இது 99.4 சதவிகிதமாகவும் காணப்பட்டது. மேலும், இந்த விலக்குகளில் இருந்தே கலால் தீர்வைச் செலவினத்தின் பெரும்பகுதி ஏற்படு கின்ற காரணத்தினால் 2024 ஆம் ஆண்டில் 9967 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட கலால் தீர்வை மீதான வரிச் செலவினம் 2025 ஆம் ஆண்டின் போது 63.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 16,254 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் 55377 ஆகக் காணப்பட்ட உள்நாட்டில் பொருத்தித் தயாரிக் கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டின் போது 74.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 96,472 ஆகக் காணப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான மதிப்பிடப்பட்ட உற்பத்தித் தீர்வைச் செலவினம் 9,023 மில்லியன் ரூபாவாகும். இதில், உள்நாட்டில் பொருத்தித் தயாரிக்கப்படும் வாகனங்களுடன் தொடர் புடைய வரிச் செலவினம் 9,005 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இது மொத்தத்தில் 99.8 சதவிகித மாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 2.13: உற்பத்தித் தீர்வை விசேட ஏற்பாடுகள் வரிச் செலவினம்**

*ரூபா மில்லியன்*

| செலவின விபரம் | வரிச் செலவினம் | | |
|---|---|---|---|
| | 2024(அ) | 2025(ஆ) | 2026 முதல் அரை(ஆ) |
| துறைமுக நகர தீர்வையற்ற கடைகள் - இறக்குமதி | 250 | 94 | 8 |
| உள்ளூரில் பொருத்தப்பட்ட வாகனங்கள் | 9,717 | 16,156 | 9,005 |
| பதிவு செய்யப்பட்ட இறுதிச் சடங்கு நடத்துபவர்களால் இறக்குமதி செய்யப்படும் சவ ஊர்திகள் | | 4 | 10 |
| **மொத்தம்** | **9,967** | **16,254** | **9,023** |

*மூலம் இலங்கைச் சுங்கம்*

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

## 2.6 சுங்க இறக்குமதித் தீர்வைகள் (CID)

2024 ஆம் ஆண்டில் 138,425.6 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட சுங்க இறக்குமதித் தீர்வை மீதான வரிச் செலவினம் 2025 ஆம் ஆண்டில் 4.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 144,473.1 மில்லியன் ரூபாவாகக் காணப் பட்டது. சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 19A எனும் பிரிவின் கீழ் பொது நோக்கங்களுக்காகவும் விசேட கருத்திட்டங்களுக்காகவும் வழங்கப்பட்ட தள்ளுபடி களில் இருந்தே 2025 ஆம் ஆண்டில் சுங்க இறக்குமதித் தீர்வைச் செலவினத்தின் பெரும்பகுதி ஏற்பட்டதுடன் இது 131,489.1 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 91.0 சதவிகிதமாக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் 2,379,828 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகளின் இணைந்த அளவு 2025 ஆம் ஆண்டில் 5.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 2,509,056 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டமையினால், சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 19A எனும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தள்ளுபடிகளால் 2024 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட 124,402.8 மில்லியன் ரூபா வரிச் செலவினம் 2025 ஆம் ஆண்டின் போது 5.7 சதவிகித அதிகரிப்பைக் காட்டி 7,086.3 மில்லியன் ரூபாவினால் அதிகரித்து 131,489.1 மில்லியன் ரூபாவாகக் காணப் பட்டது. மேலும், விலங்குத் தீவன உற்பத்திக்காகச் சோளம், பருப்பு மற்றும் அரிசி நீங்கலான சேர்மானங்களுக்காக வழங்கப்படும் விலக்குகள் 7,818.4 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு மொத்தச் சுங்க இறக்குமதித் தீர்வைச் செலவினத்தின் 5.4 சதவிகிதத்திற்குப் பங்களிப்பு வழங்கியிருந்தது. இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விலக்குகள் 1,121 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இது மொத்தத்தில் 0.8 சதவிகித மாகவும் காணப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்காக, மதிப்பிடப்பட்ட சுங்க இறக்குமதித் தீர்வைச் செலவினம் 74,246.9 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதன் பாரிய கூறு, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19A எனும் பிரிவின் கீழ் பொது நோக்கங் களுக்காகவும் விசேட கருத்திட்டங்களுக்காகவும் வழங்கப்பட்ட தள்ளுபடி களால் ஏற்பட்ட வரிச் செலவினமாகும் என்பதுடன் இது 66,683.9 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டதுடன் மொத்தத்தில் 89.8 சதவிகிதமாகவும் காணப்பட்டது. விலங்குத் தீவன உற்பத்திக்காகச் சோளம், பருப்பு மற்றும் அரிசி நீங்கலான சேர்மானங்களுக்காக வழங்கப்படும் விலக்குகள் 4,884 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு மொத்தத்தில் 6.6 சதவிகித மாகவும் காணப்பட்டது. இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விலக்குகள் 178.5 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இது மொத்தத்தில் 0.24 சதவிகித மாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 2.14 சுங்க இறக்குமதி தீர்வை செலவினம்**

*ரூபா மில்லியன்*

| விபரம் | வரிச் செலவினம் | | |
|---|---|---|---|
| | 2024(அ) | 2025(ஆ) | 2026 முதல் அரை(ஆ) |
| 19அ விலக்குகள் (பொதுவான விலக்குகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள்) | 124,402.8 | 131,489.1 | 66,683.9 |
| சுங்க இறக்குமதித் தீர்வை விலக்குகள்வழங்கப்பட்டவை: | | | |
| • சர்வதேச விமான நிலையத்தால் விமானங்களு பயன்படுத்தப்படும் தரை போக்குவரத்து உபகரணங்கள், தொழில்நுட்ப வழங்கல்கள் | 29.7 | 47.7 | 1.3 |
| • பொருட்கள் மற்றும் பிற உபகரணங்களை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கான கொள்கலன்கள் | 1.9 | 1.3 | 0.1 |
| • CEB (சிலோன் மின்சார சபை) மற்றும் அதன் துணை நிறுவனங் களுக்கான எந்தவொரு இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவை | 1,806.2 | 1,121.0 | 178.5 |
| • சோல் (Sole) உற்பத்தித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் பதப்படுத் தப்பட்ட தோல் | 51.2 | 30.2 | 19.9 |
| • முகமூடிகள் (Masks), மருத்துவ, அறுவை சிகிச்சை மற்றும் பல் உபகரணங்கள் உட்பட இயந்திரங்கள் போன்றவை | 14.4 | 8.1 | 0.05 |
| • விலங்கு தீவனம் தயாரிப்பதற்காக மக்காச்சோளம், பருப்பு மற்றும் அரிசி தவிர்த்த பிற மூலப்பொருட்கள் | 9,219.0 | 7,818.4 | 4,884.0 |
| • மோட்டார் வாகனங்கள் அல்லது இரயில் இன்ஜின்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் | 1.4 | 12.4 | 1.5 |
| • உலோகங்களை பூசுவதற்காக பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் வர்ணப்பூச்சுகள் பூச்சுகள் மற்றும் வார்னிஷ்கள் | 115.0 | 38.3 | 36.7 |
| • பிணையளிக்கப்பட்ட களஞ்சியசாலை வழிமுறையின் கீழ் அனுமதிக்கப் பட்ட மூலதனப் பொருட்கள் | 11.0 | 2.5 | 3.7 |
| • மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள் | 427.4 | 494.5 | 397.3 |
| • NMRA-இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருந்துகள் | 805.3 | 869.9 | 525.4 |
| • ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் | 57.4 | 11.8 | 32.3 |
| • விவசாய நோக்கங்களுக்கான பொருட்கள் | 450.2 | 393.5 | 146.3 |
| • சானிட்டரி நாப்கின்கள் (Sanitary napkins) தயாரிப்பதற்கான மூலப் பொருள் | 77.8 | 55.5 | 11.6 |
| • பிற பலவகை பொருட்கள் | 909.1 | 1,322.5 | 868.1 |
| • கொழும்பு துறைமுக நகர தீர்வையற்ற கடைகள் - இறக்குமதி | 46.0 | 756.5 | 456.3 |
| **மொத்தம்** | **138,425.6** | **144,473.1** | **74,246.9** |

*மூலம்:திருநெல்வேலி சுங்கம்*
*(ஆ) தற்காலிகமானது*

*குறிப்பு : 2024/2025 வரிச் செலவினக் கூற்றில் பிரிவு 19அ இன் கீழான பொது வரி விலக்குகள் தொடர்பான சுங்க இறக்குமதி வரிச் செலவினக் கணக்கீடு டீசல் மற்றும் கோதுமைத் தானியப் பொருட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2025/2026 வரிச் செலவினக் கூற்றில், பெற்றோல், முங்கில் குச்சிகள் மற்றும் இலங்கைச் சுங்கத்தின் தரவுத்தளத்தில் அடையாளம் காணப்பட்ட ஏனைய பொருட்களையும் உள்ளடக்கும் வகையில் இக்கணக்கீடு விரிவுபடுத்தப்பட்டது. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டிற்கான தரவுகளும் திருத்தப்பட்டன.*

## 2.7 மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (LTMV)

மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரியில் இருந்தான விலக்குகள் 2023 பெப்ரவரி 10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழும் அதனைத் தொடர்ந்து 2024 ஜனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க வர்த்தமானியினால் நீட்டிக்கப்பட்டவாறாகவும் வழங்கப் பட்டன. இந்தச் சலுகைகள் 2024 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையில் தொடர்ந்தும் செயல்வலுப் பெற்றிருந்தன. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) பணிப்புரைகளின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக 2024 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் தமது வாகனங்களைப் பதிவு-செய்வதற்குத் தவறிய அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சொகுசு வரிச் சலுகையினை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் இலங்கைச் சுங்கமும் அறவிட்டு வந்தன.

2026 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறாக மேற்கொள் ளப்பட்ட அறவீடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி மீதான மதிப்பிடப்பட்ட வரிச் செலவினம் திருத்தப்பட்டது. இதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டுக்காக TES 2024/2025 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளர்களின் எண்ணிக்கையும் மதிப்பிடப்பட்ட வரிச் செலவினமும் முறையே 162 இல் இருந்து 159 ஆகவும் 491 மில்லியன் ரூபாவில் இருந்து 480 ரூபாவாகவும் சரிவடைந்தன. இதேபோன்று, 2024 ஆம் ஆண்டுக்கான பயனாளர்களின் எண்ணிக்கையும் மதிப்பிடப்பட்ட வரிச் செலவினமும் முறையே 721 இல் இருந்து 662 ஆகவும் 1928 மில்லியன் ரூபாவில் இருந்து 1800 மில்லியன் ரூபாவாகவும் குறைவடைந்தன. குறித்துரைக் கப்பட்ட காலக்கெடுவினுள் தங்களின் வாகனங்களைப் பதிவுசெய்வதற்குத் தவறிய அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சொகுசு வரிச் சலுகைகளின் அறவீடுகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தத் திருத்தப்பட்ட எண்ணிலக்கங்கள் TES 2025/2026 இனுள் ஒருங் கிணைக்கப்பட்டன.

**அட்டவணை 2.15 : மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி விலக்களிப்பின் சுருக்கம்**

*ரூபா மில்லியன்*

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | வரிச் செலவினம் |
|---|---|---|
| 2023 | 159 | 480 |
| 2024 | 662 | 1,800 |

*மூலம் - இலங்கைச் சுங்கம்*

## 2.8 முடிவுரை

முடிவாக, வரி வகைகளின் மத்தியில் வரிச் செலவினங்களின் அளவு, ஆக்கக்கூறு மற்றும் அரசிறை முக்கியத்துவம் என்பவை பற்றிய ஒரு நோக்கினை இந்த அத்தியாயம் வழங்குகின்றது. இந்த மதிப்பீடுகள் மதிப்பீட்டு வருடமான 2024/25 இன் போது CIT இலும் PIT இலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினையும் அதேபோன்று 2025 ஆம் ஆண்டிலும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரை யாண்டிலும் VAT மற்றும் SSCL என்பவற்றின் கீழான கணிசமான செலவினத்தினையும் கோடிட்டுக்காட்டு கின்றன. இந்தப் பகுப்பாய்வானது சலுகை அடிப்படை யிலான வரி வீதங்கள் மற்றும் முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபை சாராத தொழில்முயற்சி களுக்கும் மொத்த விற்பனைச் செயற்பாடுகள் மற்றும் சில்லறை விற்பனைச் செயற்பாடுகளுக்கும் உள்நாட்டில் பொருத்தித் தயாரிக்கப்பட்ட வாகனங் களுக்கும் வழங்கப்பட்ட விலக்குகள் மற்றும் CID இன் கீழான தள்ளுபடிகள் மற்றும் விலக்குகள் உள்ளிட்ட வரிச் செலவினங்களின் முதன்மை மூலங்களையும் அடையாளம் காண்கின்றது. இந்தக் கண்டறிதல்கள், வரிச் சாதனங்கள் மற்றும் துறைகள் மத்தியில் வரி நிவாரண நடவடிக்கைகளின் மாறுபடும் அரசிறை விளைவுகளை எடுத்து விளக்குகின்றன.

இந்தப் பகுப்பாய்வானது வரிச் செலவினங்களைக் கிரமமாகக் கண்காணிப்பதன் முக்கியத்துவத்தினையும் இவற்றின் கொள்கைச் செயற்திறனை மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தினையும் இவற்றின் அரசிறைச் செலவுகள் பரந்த வருமானத் திரட்டுக் குறிக்கோள் களுடன் ஒத்திசைகின்றன என்பதை உறுதிப்படுத்து வதன் முக்கியத்துவத்தினையும் கோடிட்டுக்காட்டு கின்றது. இந்தக் கண்டறிதல்கள், அறிக்கையிடல் காலப்பகுதியில் உள்ள வித்தியாசங்களைக் கருத்திற் கொண்டு, காலப்போக்கில் வரிச் செலவினத்தின் ஆக்கவமைவினையும் மாற்றத்தினையும் மதிப்பிடுவ தற்கான ஓர் அடிப்படையினை வழங்குகின்றன. இதனைத் தொடர்ந்து வரும் அத்தியாயம் சட்டவாக்க ஏற்பாடுகளையும் மதிப்பிடப்பட்ட அரசிறைச் செலவு களையும் பெரும் வரவுசெலவுத்திட்ட வெளிப்படைத் தன்மை மற்றும் விவரமறிந்து எடுக்கப்படும் அரசிறைக் கொள்கைத் தீர்மானங்கள் என்பவற்றுக்கு உதவுவ தற்கான தனிப்பட்ட நடவடிக்கைகளின் கருதப்பட்ட கொள்கைக் குறிக்கோள்களையும் விளக்கி ஒரு பரிபூரணமான வரிச் செலவின விவரப் பட்டியலைச் சமர்ப்பிக்கின்றது.

# அத்தியாயம் 3

# வரிச் செலவின விபரப்பட்டியல்

## அத்தியாயம் 3 – வரிச் செலவின விபரப்பட்டியல்

இந்த அத்தியாயம் இலங்கை வரி முறையினுள் இனம் காணப்பட்ட வரிச் செலவினங்களின் விரிவான விபரப் பட்டியலை முன் வைக்கிறது. இது விலக்குகள், கழிப்பனவுகள் மற்றும் முன்னுரிமை வீதங்கள் உள்ளிட்ட ஒப்பீட்டு அளவுகோல் வரிக்கட்டமைப் பிலிருந்து விலகல் விளைவுக்கும் தனிப்பட்ட வரி ஏற்பாடுகள் பற்றிய தகவல்களை ஒருங்கிணைக்கிறது. ஒவ்வொரு உள்ளீடும் தொடர்புடைய சட்டப் பிண்ணனி, மதிப்பிடப்பட்ட நிதிச் செலவு (கிடைக்கக்கூடிய இடங்களில்) மற்றும் அடிப்படைக் கொள்கை நோக்கம் ஆகியவற்றை குறிப்பிடுகிறது. நிதி வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கிய கருவியாக இந்த விபரப்பட்டியல் செயற்படுகிறது. ஓட்டுமொத்த வருவாய் கட்டமைப் பிற்குள் தற்போதுள்ள வரிச் சலுகைகளின் நோக்கம், கலவை மற்றும் கொள்கை சீரமைப்பு ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு உதவுகிறது.

### 3.1 நிறுவன வருமான வரி செலவின விபரப்பட்டியல்

| பெயர் | வருமான வரிச் சட்டத்தின் கீழ் சலுகை விகிதங்கள் | | |
|---|---|---|---|
| விபரம் | ஒரு நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானம் 2017 ஆம் ஆண்டின் 24 இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் - முதலாவது அட்டவணை - பந்தி 4இல் குறிப்பிடப் பட்டுள்ள சலுகை விகிதங்களில் வரி விதிக்கப்படும் | | |
| வரி வகை | நிறுவன வருமான வரி | | |
| பயனாளிகள் | நிறுவனங்கள் | | |
| அளவீட்டு வகை | முன்னுரிமை விகிதம் | | |
| சட்ட பிண்ணணி | 2017 ஆம் ஆண்டின் 24 இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் - முதலாவது அட்டவணை - பந்தி 4 - நிறுவனங்களுக்கான வரி விகிதங்கள் | | |
| நோக்கம் | குறிப்பிட்ட துறைகள் அல்லது பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு மற்றும் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காக. | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கை யின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2023/2024(அ) | 2024/2025(ஆ) | 2025/2026 |
| | 114,422 | 118,508 | |

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

| பெயர் | முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் சலுகை விகிதங்கள் | | |
|---|---|---|---|
| விபரம் | முதலீட்டுச் சபையுடன் (BOI) ஒப்பந்தம் செய்துள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைக் கூட்டு நிறுவன வருமான வரி (CIT) விகிதங்கள். | | |
| வரி வகை | நிறுவன வருமான வரி | | |
| பயனாளிகள் | நிறுவனங்கள் | | |
| அளவீட்டு வகை | முன்னுரிமை விகிதம் | | |
| சட்ட பிண்ணணி | 1978 ஆம் ஆண்டு 4 இலக்க, பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் | | |
| நோக்கம் | முதலீட்டுச் சபையுடன் (BOI) ஒப்பந்தம் செய்துள்ள நிறுவனங்களுக்கு போட்டித் தன்மையுள்ள வரிச் சலுகைகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும். | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம், முதலீட்டுச் சபை | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கை யின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2023/2024(அ) | 2024/2025(ஆ) | 2025/2026 |
| | 41,682 | 11,604 | |

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

| பெயர் | **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் விலக்குகள்** | | |
|---|---|---|---|
| **விபரம்** | விவசாயம், விவசாயச் செயலாக்கம், தொழில்துறை மற்றும் இயந்திரக் கருவி உற்பத்தி, இயந்திர உற்பத்தி, இலத்திரனியல், பாரம்பரியமற்ற தயாரிப்புகளின் ஏற்றுமதி, அல்லது தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளில் ஈடுபடும் எந்தவொரு நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்கு | | |
| **வரி வகை** | நிறுவன வருமான வரி | | |
| **பயனாளிகள்** | தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் | | |
| **அளவீட்டு வகை** | வரி கழிப்பீடு | | |
| **சட்ட பிண்ணணி** | 2006 ஆம் ஆண்டின் 10 இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் - பிரிவு 17 | | |
| **நோக்கம்** | மேலே குறிப்பிடப்பட்ட துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக | | |
| **தரவு மூலம்** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| **எதிர்வு கூறல் முறை** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| **மதிப்பீடு (ரூபா. மில்லியன்)** | **2023/2024(அ)** | **2024/2025(ஆ)** | **2025/2026** |
| | 4,725 | 67,561 | |

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

| பெயர் | **துறைமுக நகரத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வரி விலக்குகள்** | | |
|---|---|---|---|
| **விபரம்** | கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் இயங்கும் நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்கு. | | |
| **வரி வகை** | நிறுவன வருமான வரி | | |
| **பயனாளிகள்** | நிறுவனங்கள் | | |
| **அளவீட்டு வகை** | விலக்க | | |
| **சட்ட பிண்ணணி** | 2021 ஆம் ஆண்டு 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் | | |
| **நோக்கம்** | கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக. | | |
| **தரவு மூலம்** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| **எதிர்வு கூறல் முறை** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| **மதிப்பீடு (ரூபா.மில்லியன்)** | **2023/2024(அ)** | **2024/2025** | **2025/2026** |
| | 143 | - | |

*(அ) திருத்தப்பட்டது*

| பெயர் | **செயல்நுணக்க அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வரி விலக்குகள்** | | |
|---|---|---|---|
| **விபரம்** | செயல்நுணக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் எனப் பெயரிடப்பட்ட நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளித்தல். | | |
| **வரி வகை** | நிறுவன வருமான வரி | | |
| **பயனாளிகள்** | நிறுவனங்கள் | | |
| **அளவீட்டு வகை** | விலக்க | | |
| **சட்ட பிண்ணணி** | 2008 ஆம் ஆண்டு 14ஆம் இலக்க செயல்நுணக்க அபிவிருத்தி கருத்திட்டச் சட்டம் | | |
| **நோக்கம்** | முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக. | | |
| **தரவு மூலம்** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| **எதிர்வு கூறல் முறை** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| **மதிப்பீடு (ரூபா. மில்லியன்)** | **2023/2024(அ)** | **2024/2025** | **2025/2026** |
| | 123 | - | |

*(அ) திருத்தப்பட்டது*

### 3.2 தனி நபர் வருமான செலவின விபரப் பட்டியல்

| பெயர் | வாடகை வருமானத்திற்கான நிவாரணம் | | |
|---|---|---|---|
| விபரம் | வசிப்பாளரான ஒரு தனிநபரின் முதலீட்டுச் சொத்துக்களுக்கான வாடகை நிவாரணம் - மதிப்பீட்டு ஆண்டின் மொத்த வாடகை வருமானத்தில் 25%. (குறித்த காலப்பகுதியின் மொத்த வாடகை வருமானத்தைப் பொறுத்தது) | | |
| வரி வகை | தனிநபர் வருமான வரி | | |
| பயனாளிகள் | தனிநபர்கள் | | |
| அளவீட்டு வகை | வரி வரவு | | |
| சட்ட பிண்ணணி | 2017 ஆம் ஆண்டின் 24 இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் - ஐந்தாவது அட்டவணை - தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்கள் | | |
| நோக்கம் | வாடகை வருமானத்தை ஈட்டுவதில் ஏற்படும் பராமரிப்பு மற்றும் அது தொடர்பான செலவுகளுக்கு ஒரு பகுதி கழிப்பீட்டை வழங்குவதன் மூலம் வாடகை வருமானத்தை முறையான முறையில் அறிவிப்பதை ஊக்குவிப்பதற்காக | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2023/2024(அ) | 2024/2025(ஆ) | 2025/2026 |
| | 7,253 | 2,034 | |

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

| பெயர் | சூரியசக்தி மின்கலங்களுக்கான செலவின நிவாரணம் | | |
|---|---|---|---|
| விபரம் | வசிப்பாளரான ஒரு தனிநபர் - தனது வளாகத்தில் சூரியசக்தி மின்கலங்களைப் பொருத்தி தேசிய மின் கட்டத்துடன் இணைத்தால், ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டுக்கும் ரூ. 600,000 - அல்லது அத்தகைய சூரியசக்தி மின்கலங்களுக்கான மொத்தச் செலவு அல்லது அத்தகைய மின்கலங்களைப் பெறுவதற்காகப் பெறப்பட்ட கடனுக்காக வங்கிக்குச் செலுத்தப்பட்ட தொகை வரை நிவாரணம் பெறலாம். | | |
| வரி வகை | தனிநபர் வருமான வரி | | |
| பயனாளிகள் | தனிநபர்கள் | | |
| அளவீட்டு வகை | வரி வரவு | | |
| சட்ட பிண்ணணி | 2017 ஆம் ஆண்டின் 24 இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் - ஐந்தாவது அட்டவணை - தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்கள் | | |
| நோக்கம் | தேசிய மின் கட்டத்துடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி தகடுகளை நிறுவுவதற்கு வரி நிவாரணம் வழங்குவதன் மூலம் வீடுகளிடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக. | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2023/2024(அ) | 2024/2025(ஆ) | 2025/2026 |
| | 2,270 | 1,720 | |

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

| பெயர் | தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள் | | |
|---|---|---|---|
| விபரம் | ஐந்தாவது அட்டவணையின் பத்தி 1 இன்படி செய்யப்பட்ட நன்கொடைகள், ஒரு மதிப்பீட்டு ஆண்டுக்கான தனிநபர் அல்லது நிறுவனத்தின் வரிக்குரிய வருமானத்தைக் கணக்கிடும்போது கழிக்கப்படலாம். | | |
| வரி வகை | தனிநபர் வருமான வரி | | |
| பயனாளிகள் | தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் | | |
| அளவீட்டு வகை | வரி கழிப்பீடு | | |
| சட்ட பிண்ணணி | 2017 ஆம் ஆண்டின் 24 இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் - ஐந்தாவது அட்டவணை - தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்கள் | | |
| நோக்கம் | அங்கீகரிக்கப்பட்ட தொண்டு, மத, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு தனியார் துறையினரையும் தனிநபர்களையும் பங்களிக்க ஊக்கு விப்பதற்காக. | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கை யின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2023/2024(அ) | 2024/2025(ஆ) | 2025/2026 |
| | 938 | 170 | |

*(அ) திருத்தப்பட்டது*
*(ஆ) தற்காலிகமானது*

### 3.3 பெறுமதி சேர் வரி செலவின விபரப் பட்டியல்

| பெயர் | கோதுமை மற்றும் கோதுமை மாவின் விநியோகம் அல்லது இறக்குமதி | | |
|---|---|---|---|
| விபரம் | கோதுமை மற்றும் கோதுமை மாவு வழங்கல் அல்லது இறக்குமதிக்கு பெறுமதி சேர்வரி விலக்கு அளிக்கப்படுகிறது. | | |
| வரி வகை | பெறுமதி சேர் வரி | | |
| பயனாளிகள் | இறுதி நுகர்வோர் | | |
| அளவீட்டு வகை | விலக்கு | | |
| சட்ட பிண்ணணி | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் - பகுதி III | | |
| நோக்கம் | வாழ்க்கைச் செலவை நிர்வகிக்க அத்தியாவசிய சேவைகளின் விலையைக் குறைத்தல் | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கை யின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2024 | 2025 | 01.01.2026 - 30.06.2026 |
| | - | | |

| பெயர் | குழந்தை பால் மாவின் விநியோகம் அல்லது இறக்குமதி | | |
|---|---|---|---|
| விபரம் | குழந்தை பால் மாவின் விநியோகம் அல்லது இறக்குமதிக்கு பெறுமதிசேர்வரி விலக்கு அளிக்கப்படுகிறது | | |
| வரி வகை | பெறுமதிசேர் வரி | | |
| பயனாளிகள் | இறுதி நுகர்வோர் | | |
| அளவீட்டு வகை | விலக்கு | | |
| சட்ட பிண்ணணி | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் -முதல் அட்டவணையின் பகுதி III | | |
| நோக்கம் | வாழ்க்கைச் செலவை நிர்வகிக்க அத்தியாவசிய சேவைகளின் விலையைக் குறைத்தல் | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கை யின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2024 | 2025 | 01.01.2026 - 30.06.2026 |
| | - | | |

| பெயர் | மருந்துப் பொருட்களின் விநியோகம் அல்லது இறக்குமதி | | |
|---|---|---|---|
| விபரம் | மருந்துப் பொருட்கள், மருந்துகள் (அழகுசாதனப் பொருட்கள் தவிர) விநியோகம் அல்லது இறக்குமதிக்கு பெறுமதிசேர்வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இறுதிப் பயன்பாடு சிகிச்சை அல்லது நோய்த்தடுப்பு விளைவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு ஒரு மருத்துவரின் பரிந்துரையின் பேரில் பொருட்கள் அல்லது மருந்துகளின் உற்பத்தி அல்லது உற்பத்திக்கான மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற பொழுது | | |
| வரி வகை | பெறுமதிசேர் வரி | | |
| பயனாளிகள் | இறுதி நுகர்வோர் | | |
| அளவீட்டு வகை | விலக்கு | | |
| சட்ட பிண்ணணி | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் - முதல் அட்டவணையின் பகுதி III | | |
| நோக்கம் | வாழ்க்கைச் செலவை நிர்வகிக்க அத்தியாவசிய சேவைகளின் விலையைக் குறைத்தல் | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2024 | 2025 | 01.01.2026 - 30.06.2026 |
| | - | | |

| பெயர் | ஆயுர்வேத மருந்துகளின் விநியோகம் அல்லது இறக்குமதி | | |
|---|---|---|---|
| விபரம் | 1961 ஆம் ஆண்டு 31 ஆம் எண் ஆயுர்வேத சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஆயுர்வேத ஆணையரின் பரிந்துரையுடன், தனிப்பயன் நோக்கங்களுக்காகவும், அத்தகைய தயாரிப்பு மூலப்பொருட்களுக்கான இணக்கமான பொருட்கள் விளக்கம் மற்றும் குறியீட்டு முறை எண்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஆயுர்வேத மருந்தகம் அல்லது ஆயுர்வேத தயாரிப்புகள்(அழகுசாதனப் பொருட்கள் தவிர) அல்லது யுனானி, சித்தா அல்லது ஹோமியோபதி தயாரிப்புகள் (அழகுசாதனப் பொருட்கள் தவிர) ஆகியவற்றின் விநியோகம் அல்லது இறக்குமதிக்கு பெறுமதிசேர்வரி விலக்கு அளிக்கப்படுகிறது. | | |
| வரி வகை | பெறுமதிசேர் வரி | | |
| பயனாளிகள் | இறுதி நுகர்வோர் | | |
| அளவீட்டு வகை | விலக்கு | | |
| சட்ட பிண்ணணி | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் -முதல் அட்டவணையின் பகுதி III | | |
| நோக்கம் | வாழ்க்கைச் செலவை நிர்வகிக்க அத்தியாவசிய சேவைகளின் விலையைக் குறைத்தல் | | |
| தரவு மூலம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| எதிர்வு கூறல் முறை | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | 2024 | 2025 | 01.01.2026 - 30.06.2026 |
| | - | | |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கச்சா மசகு எண்ணெய், மண்ணெண்ணெய், விமான எரிபொருள், கப்பல்களுக்கான எண்ணெய் அல்லது எரிபொருள் எண்ணெய் விநியோகம் அல்லது இறக்குமதி** | | |
| **விபரம்** | தனிப்பயன் நோக்கங்களுக்காக கச்சா மசகு எண்ணெய், மண்ணெண்ணெய், விமான எரிபொருள், கப்பல்களுக்கான எண்ணெய் அல்லது இணக்கமான பொருட்கள் விளக்க எண் 2710.19.60 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றின் விநியோகம் அல்லது இறக்குமதிக்கு பெறுமதிசேர்வரி விலக்கு அளிக்கப்படுகிறது. | | |
| **வரி வகை** | பெறுமதிசேர் வரி | | |
| **பயனாளிகள்** | இறுதி நுகர்வோர் | | |
| **அளவீட்டு வகை** | விலக்கு | | |
| **சட்ட பிண்ணணி** | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் -முதல் அட்டவணையின் பகுதி III | | |
| **நோக்கம்** | வாழ்க்கைச் செலவை நிர்வகிக்க அத்தியாவசிய சேவைகளின் விலையைக் குறைத்தல் | | |
| **தரவு மூலம்** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| **எதிர்வு கூறல் முறை** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய நிர்வாகத் தரவுகளை இந்நடவடிக்கையின் செலவு பிரதிபலிக்கின்றது | | |
| **மதிப்பீடு (ரூபா. மில்லியன்)** | **2024** | **2025** | **01.01.2026 - 30.06.2026** |
| | - | | |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **மனித உடலில் அணியப்படும், எடுத்துச் செல்லப்படும், பொருத்தப்படும் துணைப் பொருட்கள் அல்லது சாதனங்களுக்கான துணைக்கருவிகளை விநியோகம் அல்லது இறக்குமதி.** | | |
| **விபரம்** | செயற்கை மூட்டு, ஊன்றுகோல், சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள், அத்தகைய கருவிகளுக்கான துணைக்கருவிகள் அல்லது மனித உடலில் குறைபாடு அல்லது ஊனத்தை ஈடுசெய்ய அணியப்படும் அல்லது எடுத்துச் செல்லப்படும் அல்லது பொருத்தப்படும் உபகரணங்கள், பார்வையற்றோருக்கான வெள்ளைக் பிரம்புகள், பிரெய்லி தட்டச்சுப்பொறிகள் மற்றும் பாகங்கள், பிரெய்லி எழுதும் தாள்கள், பிரெய்லி எழுதும் பலகைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் பிற பொருட்கள், அத்தகைய நபர்கள் கோரும் நிவாரணத்தின் அளவைக் கருத்தில் கொண்டு, அந்த நோக்கங்களுக்காக செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுபவற்றின் விநியோகம் அல்லது இறக்குமதிக்கு பெறுமதிசேர்வரி விலக்கு அளிக்கப்படுகிறது. | | |
| **வரி வகை** | பெறுமதிசேர் வரி | | |
| **பயனாளிகள்** | இறுதி நுகர்வோர் | | |
| **அளவீட்டு வகை** | விலக்கு | | |
| **சட்ட பிண்ணணி** | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் - முதல் அட்டவணையின் பகுதி III | | |
| **நோக்கம்** | வாழ்க்கைச் செலவை நிர்வகிக்க அத்தியாவசிய சேவைகளின் விலையைக் குறைத்தல் | | |
| **தரவு மூலம்** | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
